தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 40 சோபகிருது வருடம், ஆடி மாதம் 31ஆம் திகதி புதன்கிழமை (16.08.2023) ஹிஜ்ரி 1445, முஹர்ரம் - 28, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

பிரபாகரன், மனைவி பிள்ளைகள் உயிருடன்!

மதிவதனியின் சகோதரி கருணா பரபரப்புத் தகவல்

02 பக்கம்

வலுசக்தி கேந்திர நிலையமாக மன்னார்

தலைமன்னார் - கொழும்பு நகர்சேர் ரயில் சேவை செப்.15முதல்

வவுனியாவில் சீனித் தொழிற்சாலை

மடுமாதா தேவாலய திருவிழாவில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

மன்னாரை வலுசக்தி மையமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தலைமன்னாரிலிருந்து கொழும்பு வரையான நகர்சேர் கடுகதி ரயில் சேவை எதிர்வரும் செப்டெம்பர் 15ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

02 பக்கம்

இந்தியாவின் 77ஆவது சுதந்திர தின விழா கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நேற்று (15) கொண்டாடப்பட்டபோது உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இந்திய தேசியக் கொடியை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்துவைத்தார்.

படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன

'சேனல் ஐ' குத்தகை அடிப்படையில் லைக்காவுக்கு!

நா. நிஜுஷா

போதிய வருமானமின்றி 'சேனல் ஐ' தொலைக்காட்சியை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல...

02 பக்கம்

கமெண்ட் கந்தர்...

ஸ்கூல் சண்டைகளுக்கெல்லாம் விஷம் கலக்கோணுமெண்டா, பெரும்பாலான ஸ்கூல்களில பிள்ளைகளே இருக்கமாட்டினம் பாருங்கோ..!

பிரதமர் தினேஷ் சீனாவுக்கு பயணம்

பிரதமர் தினேஷ் குணவர்தன நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்றுமுன்தினம் (14) சீனாவுக்குப் பயணமாகியுள்ளார்.

07ஆவது சீன - தெற்காசிய எக்ஸ்போ கண்காட்சி மற்றும் 27ஆவது சீனா குன்மிங் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கண்காட்சி...

02 பக்கம்

மாணவர்களை இலக்குவைத்து போதை விற்பனை

மதவாச்சியில் மருந்தகத்துக்கு சீல் வைக்க நீதிமன்றம் உத்தரவு

கே. சுபாஷினி

அனுமதிப்பத்திரமின்றி மருந்துப் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல், மருந்தாளரின் நேரடி மேற்பார்வையின்றி மருந்துகளை விற்பனை செய்தல், வைத்தியரொருவரால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு இன்றி மருந்து விற்பனை செய்தல் ஆகிய குற்றச்சாட்டின் பேரில் மதவாச்சி தனியார் மருந்தகமொன்றை தற்காலிகமாக மூடி சீல்வைக்குமாறு மதவாச்சி நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் வசந்த சிறிவடகொட மதவாச்சி சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து மிக நீண்டகாலமாக போதை...

02 பக்கம்

தலைவி பதவிக்குப் போட்டி; நீரில் விஷம் கலந்த மாணவி!

நாரம்மல பாடசாலையில் சம்பவம்

நாரம்மல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 10ஆம் ஆண்டு கல்வி கற்கும் மாணவி ஒருவர் களைக்கொல்லியை குடிநீரில் கலந்து அருந்த கொடுத்ததால் சுகவீனமுற்ற 06 மாணவிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் (14) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிகிச்சைக்காக வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லப் பட்டுள்ள மாணவிகளில் களைக் கொல்லியை தண்ணீரில் கலந்து கொடுத்ததாக கூறப்படும் மாணவியும்...

02 பக்கம்

13ஐ பலவந்தமாக அமுல்படுத்த மாட்டோம்

அமைச்சர் பந்துல தெரிவிப்பு

நா. நிஜுஷா

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைக்கு பாராளுமன்றத்தில் ஆதரவு கிடைக்காவிட்டால் அதனை...

02 பக்கம்

மகாவலி விடுதிகளில் ரூ.04 கோடி நட்டம்

கே. சுபாஷினி

மகாவலி அதிகாரசபைக்குட்பட்ட 27 சுற்றுலா விடுதிகள் கடந்த 2021ஆம் ஆண்டு சுமார் நான்கு கோடி ரூபா நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக தேசிய கணக்காய்வு திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

மாங்குளத்தில் கோர விபத்து மூவர் பலி; எண்மருக்கு காயம்

நா. நிஜுஷா

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-9 வீதியின் பனிக்கன்குளம் பகுதியில் மூன்று வாகனங்கள்...

02 பக்கம்

உஷ்

சரத் பொன்சேகா ஐக்கிய மக்கள் சக்தியை இரண்டாக உடைக்கப்பார்க்கிறார் என்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரை அவர் மூளைச்சலவை செய்கிறார் என்றும் கட்சித் தலைவர் சஜித்துக்கு பல பக்கங்களில் இருந்தும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளனவாம்.

ஆனால் இப்போதுள்ள நிலையில் பொன்சேகாவுக்கு எதிராக கடும் நடவடிக்கை எதனையும் மேற்கொண்டால் அது ஆளுங்கட்சியினருக்கு வாய்ப்பாக அமைந்துவிடும் என்பதால் அமைதி காக்கிறாராம் சஜித்.

ஐ.ம.ச. ஆட்சியில் அதிகாரப் பரவலாக்கல்

ஐக்கிய இலங்கைக்குள் என்கிறார் சஜித்

நாட்டில் பலரும் பேசிக் கொண்டிருக்கும் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் இன்றும் நாளையும் ஒரே நிலைப்பாட்டையே நாம் கொண்டுள்ளோம். ஒருமித்த நாட்டுக்குள் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அதிகாரப்..

02 பக்கம்

அஸ்வெசும தலைவர் இராஜினாமா

அஸ்வெசும நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் பீ.விஜயரத்ன தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். இவர் தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளருக்கு நேற்று (15) அனுப்பிவைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

02 பக்கம்

விளையாட்டுத் துறைக்கு விசேட விசாரணைப் பிரிவு

விளையாட்டுகள் தொடர்பான குற்றங்களைத் தடுப்பதற்கான விசேட விசாரணைப் பிரிவை நியமித்து, அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த விசேட விசாரணைப் பிரிவு கடந்த பெப்ரவரி 15ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளதாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் லயொப்பத்துடன் வெளியான அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விசேட விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் மற்றும் தலைவராக உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜயனாத் வனசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

விளையாட்டுகள் தொடர்பான குற்றங்களைத் தடுக்கும் சட்டத்தின் 21ஆவது பிரிவுக்கமைய, அந்த சட்டத்தின் விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்காக 03 வருட காலப்பகுதிக்காக இந்த விசேட விசாரணைப் பிரிவு நியமிக்கப்பட்டுள்ளதாக அதிவிசேட வர்த்தமானியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேர்வினின் கருத்துகளை முழுமையாக நிராகரிக்கிறோம்

அமைச்சர் பந்துல அறிவிப்பு

நா. நிறுஷா

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் கருத்துகளை முழுமையாக நிராகரிக்கிறோம். நாடு இதுவரையில் அனுபவித்த கஷ்டங்கள் போதும். வைராக்கியமான கருத்துகளால் நாட்டில் மீண்டும் கலவர நிலை ஏற்படாமல், தூரநிர்ஷ்டவசமான நிலைமைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் தினைக்களத்தில் நேற்று (15) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து கூறுகையில்,

அரசாங்கம் என்ற அடிப்படையில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் கருத்தை முழுமையாக மறுக்கிறோம். எமது மக்கள் நீண்ட காலமாக பல்வேறு நெருக்கடிகளை சந்திந்து வந்திருந்திருக்கிறார்கள். அதனால், நாட்டுக்கு பாரிய தீங்கை ஏற்படுத்தும் வகையிலாக மாற்றுத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு அவரின் இதுபோன்ற கருத்துகளை அடிப்படைவாத சக்திகள் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

அதனால், இதுவரையில் அனுபவித்த கஷ்டங்கள் போதும். இன, மத, குல அடிப்படையில் வேறு தரப்பினருக்கு நன்மை ஏற்படுத்தும் வகையில் வைராக்கியமாக கருத்துகளை முன்வைக்காமலிருப்பது சிறந்த சமூகத்தை உருவாக்கி கொள்வதற்கு அவசியமானவொன்றாகும். வைராக்கியமாக கருத்துகளை முன்வைப்பதனூடாக நாட்டில் மீண்டும் கலவரநிலை ஏற்படாமல், தூரநிர்ஷ்டவசமான தீர்மானங்களை சந்திக்க நேரிடும்.

கச்சத்தீவு தொடர்பில் அவ்வாறான கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டது தொடர்பில் எந்த தகவலும் கிடைக்கவில்லை. அதுதொடர்பில் ஒருசில தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பல்வேறு நாடுகளிலுள்ள அரசியல்வாதிகள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கருத்துகளை முன்வைப்பார்கள். நட்பு நாடுகளுடன் கலந்துரையாடல்களினூடாக நட்புறவை பேணி, பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதே அரசாங்கத்தின் வெளிநாட்டு கொள்கையாகும். எனவே, இவ்வாறான தீர்மானங்கள் உடனடியாக மேற்கொள்ளப்படுவதில்லை.

திருகோணமலை அரச மரத்தில் பௌத்த கொடிகளை அகற்றியவர் கைது

அப்துல்சலாம் யாசிம்

திருகோணமலை நெல்சன் சினிமா திரையரங்குக்கு அருகில் அரச மரத்தில் தொங்கவிடப்பட்டிருந்த பௌத்த கொடிகளை அகற்றியதுடன் தொல்பொருள் தினைக்களத்துக்கு சொந்தமான பகுதிகளுள் உள் நுழைந்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று (15) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் உப்புவெளி-ஆனந்தபுரி முதலாவது ஒழுங்கையில் வசித்து வரும் 45 வயதுடையவர் எனவும் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் குறித்து தெரியவருவதாவது, திருகோணமலை நகர் பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நெல்சன் சினிமா திரையரங்குக்கு முன்னால் உள்ள காணியில் பௌத்தபான்மை இனத்தவர்களினாலும் வெளிநாட்டு பௌத்த துறவிகளினாலும் பிரித் ஓதப்பட்டு கொடிகள் கட்டப்பட்டன.

இந்நிலையில், நேற்றையதினம் மதுபோதையில் தொல்பொருள் தினைக்களத்துக்கு சொந்தமான குறித்த பகுதிக்குள் உள் நுழைந்து கொடிகளை அகற்ற முற்பட்டபோது குறித்த சந்தேநபர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

மேலும் மதுபோதையிலேயே இக்கொடிகளை அகற்றி இருக்கலாம் எனவும் தெரியவந்துள்ளது.

ஐ.ம.ச. ஆட்சியில்...

பரவலாக்கலை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கிறோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேண தேசிய ஒற்றுமை மிகவும் அவசியம் என்றும், நாட்டின் அனைத்து பிரஜைகளும் சமமாக கருதப்பட்டு ஒவ்வொரு சமூகத்துக்கும் சுயமரியாதையுடன் வாழும் உரிமை வழங்கப்பட வேண்டுமெனவும் இன்று இவை அச்சுறுத்தலுக்குள்ளாகி இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டினார்.

மகா சங்கத்தினரின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் சிறந்த முறையில் பெற்றுக்கொண்டு பாதகமான காரணிகளை நீக்கி சாதகமான காரணிகளுடன் சமய சேவை, சமூக சேவை மற்றும் முற்போக்கு அரசியல் பயணத்தை முன்னெடுக்கும் சக்தியாக ஐக்கிய மக்கள் சக்தி திகழ்கின்றது.

விழுமியமிக்க சமூகத்துக்கான பிக்குகள் ஆலோசனை பேரவையின் இரண்டாம் கட்டம் நேற்று (15) காலி மாவட்டத்தை இலக்காகக் கொண்டு காலி நகரசை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் பத்தாயிரத்து எண்பத்தி ஒன்பதுக்கும் மேற்பட்ட விகாரைகளும் பத்தாயிரத்து பதினெட்டுக்கும் மேற்பட்ட தஹும் அறநெறிப் பாடசாலைகளும் 800க்கும் மேற்பட்ட பிரிவினாக்களும் உள்ளதாகவும் ஒவ்வொரு மதஸ்தான நிறுவனங்களின் ஆற்றலை சமய மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மாற்றும் வகையில் செயல்படுத்த ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரசியலமைப்பில் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள விசேட இடம் எப்போதும் பாதுகாக்கப்படும். ஏனைய மதங்களும் சமயங்களும் பாதுகாப்பாக இருக்க செயற்பட வேண்டும். நாட்டில் பிளவு ஏற்பட்டால், நாட்டின் தேசிய பாதுகாப்பு பற்றி பேசுவதில் அர்த்தமில்லை. அந்தப் பிரிவினையை இல்லாதொழிக்க வேண்டும்.

மேலும், நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக அனைத்து மக்கள் சமூகங்களும் தம்மை அர்ப்பணிக்கும் இலக்கை நோக்கி ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் செயற்படும்.

இதேவேளை, தான் ஏன் ஜனாதிபதி பதவியை ஏற்கவில்லை என பலரும் விமர்சிக்கின்றனர். திருடர்களை வைத்து அரசியல் செய்ய வேண்டும் என்ற அச்சத்தாலும் வெட்கத்தாலுமே தான் ஜனாதிபதி பதவியை ஏற்கவில்லை.

நான் புதிய ஆணையின்றி நாட்டின் பொறுப்பை ஏற்க மாட்டேன். மகா சங்கத் தினரின் ஆசிர்வாதங்களை பெற்றுக் கொண்டு கொள்கைகளை மதித்து கொள்கைசார் தூய்மையான பயணத்தை மேற்கொள்ளத் துயாரக இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபாகரன்...

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், மனைவி மதிவதனி, மகள் துவாரகா ஆகியோர் உயிருடன் இருப்பதாகவும் அவர்களுடன் உளவுநிறுவனமும் மதிவதனியின் சகோதரி கருணா ஏரம்பு பாபரப்பு தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் கானொளியொன்றை வெளியிட்டு தெரிவித்த கருத்துகள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது,

வணக்கம் நான் கருணா கணேசிகிறேன். எனது தற்தையின் பெயர் ஏரம்பு. எனது தாயாரின் பெயர் சின்னம்மா. நாங்கள் புங்குடுதீவை பிறப்பிடமாகக் கொண்டவர்கள். 2009ஆம் ஆண்டு நடந்த போரின் காரணமாக எனது தங்கை மதிவதனியும் மகள் துவாரகா மற்றும் உறவினர்கள் தொர்ப்பில் இலங்கை அரசாங்கத்திடமிருந்தும் ஊடகத்திடமிருந்தும் செய்திகளை அறிந்துகொண்டேன்.

அவர்கள் உயிருடன் இருப்பதாக அன்மைக்காமாக நான் அறிந்துகொண்டேன். அதன் பின்பு அவர்களை நேரில் சந்திந்து உரையாடி உளவுருந்திவிட்டு வந்தேன். இந்தச் செய்தியை மிகவும் மகிழ்ச்சியுடன் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அறியத்தருகிறேன். இந்த செய்தியை கடவுள் கொடுத்த கொடையாக்தான் நான் நினைக்கின்றேன்.

பிரபாகரன், அவரது மனைவி மதிவதனி, மகள் துவாரகா ஆகிய மூவரையும் நான் கண்டேன். அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதை பாதுகாப்பு காரணத்துக்காக சொல்ல மாட்டேன் எனத் தெரிவித்துள்ளார்.

மகாவலி...

வரவுக்கு அதிகமாக செலவு செய்தாலும் மேற்படி கற்றுலா விடுதிகள் ஒதுக்கப்படுவதும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என கூட்டுக்கட்டப்பட்டுள்ளது.

இதுகுறித்து தேசிய கணக்காய்வு திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மேற்படி கற்றுலா விடுதிகளில் குறைந்தளவிலான வருமானம் கிடைக்கப் பெற்றபோதிலும் பிரதான அனைகள் மற்றும் நீர்த்தேக்க இயக்க அலுவலகத்தின் கீழ் இயங்கும் நாள்கு கற்றுலா விடுதிகளிலும் கடந்த 2021ஆம் ஆண்டு முதல் இதுவரை ஒன்லைன் மூலம் முன்பதிவு செய்தல் மற்றும் வெளியாட்களுக்கு கொடுத்தல் ஆகியன நிறுத்தப்பட்டுள்ளன.

அத்தோடு சேவை தேவைகருதி சுற்றுலாப் பயணிகளுக்கு ஒதுக்கப்படுவதும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என கணக்காய்வுக்கட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, அதிகார சபையின் மேலும் செடிகள் வளர்க்கப்படும் பதினொரு தவறணைகளில் எட்டுக்கு நட்டமேற்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. அவற்றின்மூலம் கடந்த 2021ஆம் ஆண்டு மூன்று கோடியே 50 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

தலைவி பதவிக்குப்...

அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

சற்தேகமடைந்த மாணவி நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை நடைபெற்ற கூட்டத்துக்கு வாராமல் வகுப்பறையில் தங்கி சக மாணவிகளின் குடிநீர் போத்தல்களில் களைக்கொல்லி பொடியை கலந்து கொடுத்தது தெரியவந்துள்ளது.

பாடசாலையில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கெமராக்களில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்ததில், குறித்த மாணவி அடையாளம் காணப்பட்டார்.

நெருங்கிய நண்பிகள் சிலரின் குடிநீர் போத்தல்களில் களைக்கொல்லி கலக்கப்பட்டமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

களைக்கொல்லி கலந்த தண்ணீரை குடித்துவிட்டு சக மாணவிகள் வாந்தி எடுத்த நிலையில், அச்சமடைந்த மாணவியும் அதே தண்ணீரைக் குடித்துள்ளார்.

குறித்த பாடசாலையின் மாணவத் தலைவி பதவிக்கான போட்டியே இந்த சம்பவத்துக்கு அடிப்படையாக உள்ளதாக பாடசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மாணவர்களை...

வில்லைகள் விற்பனை செய்யப்பட்டுவருவதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்படி மருந்தகத்தை குறிவைத்து புலனாய்வுப் பிரிவினரால் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில், கடற்படை புலனாய்வு அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் (14) மேற்படி சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இதுகுறித்து அநுராதபுரத்திற் அமைந்துள்ள உணவு மற்றும் மருந்து பரிசோதகர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, மேற்படி தனியார் மருந்தகத்தை சோதனைக்குட்படுத்தியபோது சுமார் 11 ஆயிரம் Prigabalin 150 மில்லிகிராம் வகை வலி நிவாரணி மருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் குறித்த மருந்துகளை விற்பனை செய்த சற்தேகநபராக மங்கள புஷ்பகுமார என்பவர் கைது செய்யப்பட்டு மதவாச்சி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அல்வெசும்...

இதேவேளை, இலங்கை நிர்வாக சேவையின் முதற்தர அதிகாரியான ஜயந்த விஜேரத்னவை 'அல்வெசும்' நலன்புரி நன்மைகள் சபையின் தலைவராக நியமிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்பு பேரவைக்கு பரிந்துரைத்தார்.

'சேனல் ஐ'...

முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நாளொன்றுக்கு மிக குறுகிய மணிநேரத்துக்கே இந்த அலைவரிசை செயற்படுகின்றது. அதன்காரணமாகவே, 'சேனல் ஐ' தொலைக்காட்சி ஒளிபரப்பாகும் குறுகிய காலப்பகுதியை மாத்திரம் 'லைக்கா' குழுமத்துக்கு குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 25 மில்லியன் ரூபா மாதாந்த வருமானத்தின் அடிப்படையிலேயே இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

மேலும், நேற்று முன்தினம் (14) அமைச்சரவை கூட்டம் இடம்பெற்றபோது முன்னைவக்கப்பட்ட யோசனை நிராகரிப்பட்டமையினால் மீண்டும் அவர் கட்டிக்காட்டினார்.

அரசாங்கத் தகவல் தினைக்களத்தில் நேற்று (15) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

'சேனல் ஐ' தொலைக்காட்சியை லைக்கா குழுமத்துக்கு முழுமையாக வழங்குவதற்கு எந்த தீர்மானமுமில்லை. அதுதொடர்பில் ஊடகங்களில் வெளியிடப்படும் செய்திகளை முழுமையாக மறுக்கிறோம். பத்திரிகையொன்றில் இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கும் 'சேனல் ஐ' தொலைக்காட்சியை குத்தகை அடிப்படையில் லைக்கா குழுமத்துக்கு வழங்குவதற்காக முன்வைக்கப்பட்ட அமைச்சரவை யோசனை நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் நேற்று (நேற்று முன்தினம்) மாலை ஜனாதிபதி தலைமையில் ஒன்று கூடிய அமைச்சரவை கூட்டத்தின்போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், நேற்று முன்தினம் மாலை அமைச்சரவை இடம்பெறவில்லை. நேற்று முன்தினம் காலையிலேயே அமைச்சரவை கூட்டம் நிறைவடைந்துவிட்டது. அதன்போது, 'சேனல் ஐ' தொலைக்காட்சிய விற்பனை செய்யவோ அல்லது குத்தகைக்கு வழங்குவதற்காகவோ நாள் எவ்விய ஒளிபரப்பையும் முன்வைக்கவில்லை. ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கும் 'சேனல் ஐ' தொலைக்காட்சி 4-5 மணிநேரமே முன்னெடுக்கப்படுகின்றது. போதிய வருமானம் இன்மையினால் முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை உருவாகியுள்ளது.

அதன் காரணமாக, மின்கட்டணம் செலுத்துவது கூட பிரச்சினைக்குரிய விடயமாக மாறியுள்ளது. இவ்வாறு நட்டத்தில் முன்னெடுக்கப்படும் வரும் 'சேனல் ஐ' தொலைக்காட்சியை ஒளிபரப்பு இடம்பெறும் காலப்பகுதியில் மாத்திரம் குறுகிய கால ஒப்பந்தத்தின் அடிப்படையில், ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் பிரிவினரின் தீர்மானத்துக்கமைய எனது அனுமதியுடன் குறுகிய ஒளிப்பரப்புக் காலத்தை மாத்திரம் குத்தகைக்கு விட்டுள்ளோம்.

மாதமொன்றுக்கு 25 மில்லியன் ரூபா குத்தகை கிடைக்கும் வகையிலேயே இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கு காரணம், இதற்காக அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை என்றே அமைச்சரவை கூறியிருந்தது. ரூபவாஹினி கூட்டுத்தாபன சட்டத்தில் வர்த்தக நடவடிக்கைகளுக்காக பணிப்பாளர் பிரிவுக்கு சட்ட அதிகாரம் கிடைத்துள்ளது. அவ்வாறிருக்கையில் அதற்கான யோசனைகள் அமைச்சரவையில் வரந்துவரயாட வேண்டிய அவசியமில்லை. பணிப்பாளர் பிரிவினருடன் கலந்துரையாடி தீர்மானமொன்றை எடுக்க முடியும்.

எனவே, ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு புதிய பணிப்பாளர் ஒருவரையும் நியமித்திருக்கிறோம். எனக்கு கீழ் இயங்கும் எந்தவொரு நிறுவனத்துக்கு உறுப்பினர்களை நியமிக்கும்போதும், அரசியல் தொடர்பாடல்களுக்காகவும் உறவினர்களை பதவிகளுக்கு நியமிப்பதில்லை.

தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையிலிருந்து ஒளிபரப்பு கூட்டுத்தாபனத்தை கட்டியெழுப்புவதற்கு, ஆறு மாதத்துக்குள் தேவையான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்கும் நோக்கில் பணிப்பாளர் வழங்கி அதற்கான சுதந்திரத்தையும் அவருக்கு வழங்கியுள்ளேன். அதற்கமையவே, 'சேனல் ஐ' தொலைக்காட்சி ஒளிபரப்பாகும் குறுகிய காலப்பகுதியை மாத்திரம் லைக்கா நிறுவனத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சகல கணக்கிகுப்புகளையும் முன்னெடுத்து அதனூடாக இலாபம் கிடைத்தன் காரணமாகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் விளையாட்டு போட்டிகள் உள்ளிட்ட ஏனைய விளையாட்டுப் போட்டிகளில் ஒளிபரப்புக்காக மாத்திரமே அந்த நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, நிறுவனத்தின் வளர்ச்சி குறித்து பணிப்பாளர்கள் கரிசனையுடன் செயற்படுவதால் அவர்களின் தீர்மானத்துக்கமைய செயற்பட முடியும். அமைச்சரவையின் அனுமதி வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்றே அறிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அந்த யோசனையை நீக்கிக்கொண்டேன்.

பகிரங்கமாக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் போட்டித்தன்மையுடன் முன்னிலையாகும் வகையில் இரண்டு வருடங்களுக்கு விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுக்காக மாத்திரம் 'சேனல் ஐ' தொலைக்காட்சியை நீண்ட நாள் குத்தகையின் அடிப்படையில் கொடுக்க தீட்டமிடுமாறு பணிப்பாளர் விடுத்துள்ளேன். அவ்வாறு யாரும் முன்னிலையாகும் பட்சத்தில் அதற்கான விலைமனுக்கோரல் பகிரங்கப்படுத்த தயாராக இருக்கிறேன். லைக்கா நிறுவனத்துடனான இந்த ஒப்பந்தத்தில் எந்த சிக்கலும் இல்லை. நிறுத்தவதானால் ஒரு மாதத்துக்கு முன் அறிவித்துவிட்டு ஒப்பந்தத்தை நிறைவு செய்ய முடியும் என்றார்.

பிரதமர்...

ஆகியவற்றில் பிரதம அதிதியாக பிரதமர் கலந்து கொள்ளவுள்ளார்.

சீன வர்த்தக அமைச்சு மற்றும் யுனான் மாகாண அரசு இணைந்து இந்த கண்காட்சியை நடத்துகின்றன.

சீனாவின் குன்மிங் நகரில் இன்று முதல் எதிர்வரும் 20ஆம் திகதி வரை இந்த கண்காட்சி இடம்பெறவுள்ளது.

இந்த மாபெரும் வர்த்தகக் கண்காட்சியில் 60 நாடுகள் பங்கேற்கவுள்ளதுடன், அனைத்து தெற்கு மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளும் பிராந்திய பொருளாதார பங்குடைமை அமைப்பின் உறுப்பு நாடுகளும் நிதில் அபங்குவதாக பிரதமர் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொது அபிவிருத்திக்கான ஒருமைப்பாடு மற்றும் ஒருங்கிணைப்பு எனும் தொனிப்பொருளின் கீழ் இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது.

இராஜாங்க அமைச்சர்களான தாரக பாலசூரிய, ஜனக வக்கும்பர மற்றும் கனக ஹேரத், பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன மற்றும் பிரதமரின் செயலாளர் அஜித் சிரநாயக்க ஆகியோரும் சீனாவுக்குப் பயணமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாங்குளத்தில்...

ஒன்றுடனொன்று மோதி நேற்று (15) அதிகாலை காலை இடம்பெற்ற கோர விபத்து சம்பவத்தில் மூவர் பலியானதோடு எண்மர் காயமடந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொழும்பு வெல்லம்பிட்டி பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பொருட்களை ஏற்றியவாறு இரண்டு சிறிய ரக லொறிகளில் சுமார் பதினைந்து பேர் வரை வருகை தந்துள்ளனர்.

இந்நிலையில், மு்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-9 வீதியின் பளிக்கன்குளம் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தில் மோதி குறித்த வாகனம் மற்றைய வாகனத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்நிலையில், கேடி.எச்.ரக வாகனத்தில் வந்த சாவகச்சேரி பகுதியை சேர்ந்த ஒருவரும் வெல்லம் பிட்டி பகுதியில் இருந்து வந்த வாகன ரயர் மாற்றிக்கொண்டிருந்தவர்களில் இருவருமாக மூவர் உயிரிழந்துள்ளனர். குறித்த விபத்தில் மேலும் எண்மர் காயமடந்துள்ளனர். உயிரிழந்த மூவரின் உடலங்களும் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் காயமடந்தவர்களில் மூவர் மாங்குளம் ஆதார வைத்தியசாலையிலும் ஐவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வலுச்சக்தி...

மன்னார் மடுமாதா தேவாலய திருவிழாவில் நேற்று (15) கலந்து கொண்டு உரையாற்றும் போது ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இந்த வருடம் மடுமாதா திருவிழா கூட்டுத்திருப்பலிப் பூஜையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணைந்து கொண்டமை விசேட அம்சமாகும். திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதை அடுத்து, மடுமாதாவின் திருச்சொரூப பவனி இடம்பெற்றது. வருடாந்த மடுமாதா திருவிழாவில் நாட்டின் பலபாகங்களில் இருந்தும் பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

மடு மாதாவுக்கு மகுடம் சூட்டப்பட்டு 2024ஆம் ஆண்டுடன் நூறு ஆண்டுகள் நிறைவடைகின்றன. அதனை நினைவுகூரும் நிகழ்வுகளை வருடம் முழுவதும் நடத்த ஆலய நிர்வாகக் குழு முடிவு செய்துள்ளது.

''தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் ஏற்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்து பாராட்டுக்குரியது எனவும் வத்திக்கான் மற்றும் கத்தோலிக்க திருச்சபையின் ஆசீர்வாதமும் இதற்கு கிடைக்கும்'' எனவும் மடு திருவிழாவில் கலந்து கொண்ட இலங்கைக்கான வத்திக்கான் அப்போஸ்தலிக்க பிரதிநிதி பிரையன் உடைக்வே ஆண்டகை தெரிவித்தார்.

நாட்டில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் பேண வேண்டிய பாரிய பொறுப்பு மதத் தலைவர்களுக்கு உண்டு என்று கூட்டுக்காட்டிய பிரையன், நாட்டைப் பிளவுபடுத்தும் மத முகவரார மாறுவதா அல்லது நாட்டை ஒன்றிணைக்கும் மதத் தலைவராக மாறுவதா என்பது அவரவர் செய்யும் செயற்பாடுகளிலேயே தீர்மானிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கறியுதாவது,

''மடு தேவாலய வருடாந்த திருவிழா என்பது எது நாட்டு கலாசாரத்தின் ஒரு அங்கம் என்றே கூற வேண்டும். இந்தத் திருவிழாவை தேசிய நிகழ்வாகக் கருதி அதனைப் பாதுகாக்கவும் தொடர்ச்சியாக நடத்தவும் தேவையான ஆதரவை அரசாங்கம் வழங்கி வருகிறது. அத்தோடு வருடாந்த மடு திருவிழாவை நடத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் அனைத்து அருட்தந்தையர்களுக்கும் அரசாங்கம் சார்பில் எனது நன்றியை தெரிவிக்கிறேன். மடுமாதாவிடம் பிராா்த்தனை செய்து ஆசீர்வாதம் பெற ஏராளமான பக்தர்கள் இங்கு வருகிறார்கள். கடந்த வருடம் நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட போது, பெருமளவான மக்கள் இங்கு வந்து மடு மாதாவின் ஆசீர்வாதத்தையும் பாதுகாப்பையும் நாடினர். அந்த கடினமான நிலைமையில் மடு மாதாவின் ஆசீர்வாதமும் எமக்கு பலமாக அமைந்தது என்பதை குறிப்பிட வேண்டும்.

மடு மாதா குடிகொண்டிருக்கும் இந்த மன்னார் பிரதேசம் அதிகளவு புதுப்பிக்கத்தக்க வலுசக்தியைக் கொண்ட பிரதேசமாகும். இங்கு கிடைக்கும் சூரிய சக்தி, காற்றாலை மற்றும் பசுமை ஆற்றல் மூலம் மன்னார் மாவட்டத்தை வலுக்கதி மையமாக உருவாக்க முடியும். மேலும், பூகநியை எரிசக்தி கிராமமாக உருவாக்க திட்டமிட்டுள்ளோம். இந்த புனித பூமியும் வளமும் பாதுகாக்கப்படும் வகையிலேயே இந்த அபிவிருத்திச் செயற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை நான் கூற விரும்புகின்றேன். மேலும், இப்பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகளின்போது இங்குள்ள அருட்தந்தைகளின் ஆலோசனைகளையும் வழிகாட்டுதலையும் பெறுமாறு அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளேன்.

அடுத்த மாதம் முதல் மன்னாரிலிருந்து கொழும்புக்கு நகர்சேர் கடுகதி ரயில் சேவையை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. சாள்ஸ் நிர்மலநாதனின் வேண்டுகோளுக்கிணங்க, நகரங்களுக்கு இடையிலான ரயில் சேவை ஆரம்பிக்கப்படுகிறது. அவரின் வேண்டுகோளுக்கு அமைய வவுனியாவில் சீனித் தொழிற்சாலையொன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கு, அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. இந்த அனைத்து செயற்பாடுகளின் ஊடாகவும் 2048ஆம் ஆண்டளவில் அபிவிருத்திப்படைந்த இலங்கையை கட்டியெழுப்ப எதிர்பார்க்கிறோம். அதற்கு உங்கள் ஆதரவை எதிர்பார்க்கிறேன்'' என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

மன்னார் ஆயர் கலாநிதி அதி வண. இமானுவேல் பொன்னாண்டோ அண்டகை, இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி மன்றத் தலைவர் கலாநிதி சந்ரா பொன்னாண்டோ உள்ளிட்ட அருட்தந்தையர்கள், கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, அமைச்சர் நளீன் பொன்னாண்டோ, இராஜாங்க அமைச்சர்கள் அநுநிக பொன்னாண்டோ, காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன, செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சரத்ராய்க மற்றும் பெருந்திரளான பக்தர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தமிழன் வெளியீடு 2023.08.14 — தேசிய லொத்தரசீட்டு சபை National Lottery Board — www.nlb.lk

மஹஜன சம்பத் — சீட்டிழுப்பு இலக்கம் 5206 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,098,808.00
ஆதிவார வெற்றிச் சீட்டு P — வெற்றி இலக்கங்கள் 8 1 2 9 8 5

கொடிகாமம் — சீட்டிழுப்பு இலக்கம் 3448 — சீட்டிழுப்பு திகதி 2023.08.14 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 72,776,924.00
ஆதிவார வெற்றிச் சீட்டு S — வெற்றி இலக்கங்கள் 06 20 40 73 — விசேட வெற்றிச் சீட்டு S — இலட்சாதிபதி பயன் எண்கள் வெற்றி இலக்கம் 15154

ஐந்து 7 — வெற்றி இலக்கங்கள் 8 5 2 9 6 5 — திகதி 14.08.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0032 — L7 இலக்கம் 2 5 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,929,712.72

தன நிதானய — தேதி 2023/08/14 — சீட்டிழுப்பு இலக

மன்னார், மடுமாதா தேவாலய வருடாந்த திருவிழா நேற்று (15) இடம்பெற்றது. இதன்போது அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான பத்தர்கள் கலந்துகொண்டு வழிபாட்டில் ஈடுபட்டனர்.

புத்தளம் மாவட்ட இறால் பண்ணையாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்

அமைச்சர் டக்ளஸ் உறுதி

இலங்கை தற்போது முகங்கொடுத்து வரும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மத்தியில் நாட்டுக்கு டொலர்களைப் பெற்றுத்தரக்கூடிய இறால் வளர்ப்பு துறையை அபிவிருத்தி செய்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

புத்தளம் மாவட்ட இறால் பண்ணை உரிமையாளர்களுடனான சந்திப்பு கடற்றொழில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் இறால் வளர்ப்பில் எதிர்கொண்டுவரும் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பாக அமைச்சருக்கு சுட்டிக்காட்டப்பட்டதுடன் அதனைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டது.

குறிப்பாக, சிலாபம் களப்பு பிரச்சினை, இறால்களுக்கு ஏற்படும் நோய், கால்வாய் துப்புரவு, கழிமுகங்கள், கண்டல் தாவரம் வளர்ப்பு, தொழிலை மேம்படுத்தல் நிபுணத்துவ ஆலோசனை, உற்பத்தி வீழ்ச்சி, வட்டியற்ற கடன் வசதி, மின் கட்டணம் செலுத்துவதில் நிவாரணம், தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பு போன்றவற்றில் அரசு மற்றும் அமைச்சின் உதவியை எதிர்பார்ப்பதாக பண்ணை உரிமையாளர்கள் தெரிவித்தனர். அவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்த அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

அதிகாரிகள் சகிதம் புத்தளம் மாவட்டத்திலுள்ள இறால் பண்ணைகளுக்கு அண்மையில் விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்தேன். இதன்போது ஒருசில இறால் பண்ணைகளின் செயற்பாடுகள் தமக்கு திருப்தியளிக்கவில்லை. களப்பு பிரச்சினையையும் இறால் பண்ணைகளின் பிரச்சினைகளையும் ஒன்றுக்கொன்று குழப்பிக்கொள்ளக் கூடாது. இப் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன், இவ் விடயம் தொடர்பாக அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பித்து தீர்வைப் பெற்றுக் கொடுக்க முயற்சிப்பேன். இப்பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக நாரா, நக்டா, சிலாடா மற்றும் கடற்றொழில் அமைச்சின் நிபுணர்கள் அடங்கிய விசேட குழுவொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்க, நாரா, நக்டா, சிலாடா நிறுவனங்களின் உயரதிகாரிகள், முன்னாள் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த மற்றும் புத்தளம் மாவட்ட இறால் பண்ணை உரிமையாளர்கள் உட்பட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்தியாவின் 77 ஆவது சுதந்திர தின விழா கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தலைமையில் நேற்று(15) கொண்டாடப்பட்டது. படம்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் குவியம் விருது

ஈழத் தமிழ் சினிமா கலைஞர்களை தொடர்ந்தும் ஆதரித்து வரும் குவியம் ஊடகம் இரண்டாவது தடவையாக ஏற்பாடு செய்திருந்த "குவியம் விருதுகள் 2023" நிகழ்ச்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்றது.

இற்றைக்கு வரை கடந்த 2022 ஆம் ஆண்டு வெளிவந்த திரைப்படங்கள், குறும்படங்கள், கானொளிப் பாடல்கள் மற்றும் ஆவணப்படங்களில் இருந்து வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கிக்கௌரவிக்கப்பட்டன.

இன்றைய இளைகளின் இதயம் வென்ற "ஏப் சிலோன்" குழுவினரின் கலக்கல் பாடல் மற்றும் "காங் எக்ஸ்" குழுவினரின் அனல் பறக்கும் நடனம் என பல கலைநிகழ்ச்சிகளும் இந்த விழாவில் அரங்கேறியது.

அது மட்டுமல்லாது, காரை சிவநேசனின் இயக்கத்தில் விரைவில் வெளியாகவிருக்கும் "புஷ்பக 27" என்ற திரைப்படத்தின் ட்ரெயிலரும் நிகழ்வில் வெளியிடப்பட்டது.

அத்துடன், ஈழத்தமிழ் சினிமாவுக்கான தனித்துவத்தையும் அடையாளத்தையும் வேண்டி ஓயாது பயணித்துக்கொண்டிருந்த வேட்கையாளன் அமரர் நவரட்னம் கேசவராஜா சினிமாவுக்கு ஆற்றிய சேவையைக் கௌரவிக்கும் முகமாக "வாழ்நாள் சாதனையாளர்" விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

அமரர் கேசவராஜா சார்பாக அவரது துணைவியார் மற்றும் மகன் ஆகியோர் அந்த கௌரவத்தை பெற்றுக் கொண்டனர். மேலும், மூத்த சினிமா கலைஞர்கள் ஐவரும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் சினிமா கலைஞர்கள், சினிமா ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சிலாபம் நஸ்ரியா மத்திய கல்லூரியின் ஸ்தாபக உறுப்பினர் மர்ஹூம் அப்துல் வஹாப், அமரர் ராசையா ஆகியோரது நினைவாக அவர்களது புதல்வர்களான சிலாபம் நகரசபை முன்னாள் பிரதி முதல்வரும் சட்டத்தரணியுமான சாதிகுல் அமீன் மற்றும் சுவிட்சர்லாந்து நாட்டில் புலம்பெயர்ந்து வாழும் ராசநாயகம் ஆகியோரது நிதிப்பங்களிப்பில் திறன் பலகையுடன் கூடிய வகுப்பறை (Smart Classroom) அமைக்கப்பட்டு அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

பகிரங்க ஏல விற்பனை

எமது சேவை மையங்களில் அடகுவைக்கப்பட்டு ஒப்பந்தக்காலம் முடிவடைந்தும், மீட்கப்படாத தங்க நகைகள் 2023 ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி காலை 9.30 மணியிலிருந்து மாலை 2.30 மணி வரை எமது நகர காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

COMMERCIAL CREDIT

முகாமையாளர்
கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி
நகர காரியாலயம்
இல. 165, கின்சி வீதி
கொழும்பு 08

தினசரி பலாபலன்கள்

சோபகிருது வருடம் ஆடி மாதம் 31 ஆம் நாள் புதன்கிழமை

மேஷம் – தொலைநோக்கு சிந்தையோடு இன்று வேலைகளை ஆரம்பிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூத்தாடும்.

ரிஷபம் – பண வருவாய்க்கு குறை இருக்காது. தைரியத்தை விடமாட்டீர்கள். விடா முயற்சி வெற்றியைத் தரும்.

மிதுனம் – குடும்பத்திற்கான செலவுகளைச் செய்யவேண்டிய கட்டாயம். ஆனாலும் சாமாளித்துக் கொள்வீர்கள்.

கடகம் – விருந்துபசாரங்களில் அல்லது குடும்ப நிகழ்வுகளில் கலந்துகொள்வீர்கள். பரிசுப் பொருட்கள் கிடைக்கப் பெறுவீர்கள்.

கன்னி – அதிக ஜோபத்தாலும், ஆனவத்தாலும் புத்தி இழற்று விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வீண் பயணம் வேண்டாம்.

சிம்மம் – பொருள் தன வரவால் மகிழ்ச்சி உண்டு. நினைத்த காரியத்தில் வெற்றியும் லாபமும் உண்டு.

துலாம் – தொழில் முயற்சிகளில் வெற்றி கிட்டும். உங்கள் நண்பர்கள் மூலம் நீங்கள் கேட்ட உதவிகள் கிடைக்கும்.

விருச்சிகம் – வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் சிரமங்கள் தோன்றும். கடின உழைப்பு உடல் அசதியைத் தரும்.

தனுசு – உடல் நோய்களால் சற்று சிரமப்படுவீர்கள். தன, பொருள் இழப்புகளை இன்று சந்திக்க வேண்டி வரும்.

மகரம் – சமூகத்திலும் தொழிலிடத்திலும் கவனமாக நடந்துகொள்ளுங்கள். உங்கள் துணைவியிடமிருந்து ஆறுதல் கிடைக்கும்.

கும்பம் – உங்கள் பகைவர்கள் விநயமாக நடந்து கொள்வார்கள். கேட்ட இடத்திலிருந்து பணம் இன்று கிடைக்கும்.

மீனம் – போட்டி, பந்தயங்களில் வெற்றி வாகை சூடி சாதனை படைப்பீர்கள். குழந்தைகளால் மகிழ்ச்சி.

திதி: அமாவாசை பி.ப.3.08 வரை பின் பிரதமை

நட்சத்திரம்: ஆயிலியம் பி.ப.4.57 வரை பின் மகம்

யோகம்: மரண யோகம் முழுவதும்

வார சூலை: வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது.

நல்லநேரம்: மு.ப. 9.05– 10.05 மணி வரை

ராகுகாலம் : 12.05 – 1.35 மணி வரை

எமகண்டம் : 7.35 – 9.05 மணி வரை

குளிகை: 10.35 – 12.05 மணி வரை

சந்திராஷ்டமம்: தனுசு- மகரம் ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

தனஅதிஷ்டம்: பூசம்,அனுஷம், உத்தராட்டாதி, ஆயிலியம், கேட்டை, ரேவதி (பிறந்தவர்களுக்கு)

விஷேட தினம்: ------

கணிப்பு : சிவா பாஸ்கரராவ்
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

மோட்டார்சைக்கிள் சந்தை – அநுராதபுரம்

வாகன இல.	தயாரிப்பு	மாதிரி
NC BHD-62XX	BAJAJ	PLATINA
NC BGX-15XX	BAJAJ	PLATINA
NC BFQ-32XX	BAJAJ	DISCOVER 125
NW BIJ-42XX	BAJAJ	PLATINA
NW BEU-38XX	BAJAJ	PULSAR 150 NS
NWBGM-77XX	BAJAJ	CT 100
NC BDA-52XX	BAJAJ	PLATINA
NC BEN-69XX	BAJAJ	PULSAR 150 UG 4.5
NC BBC-15XX	BAJAJ	PULSAR 150 UG 4.5
NC BAZ-05XX	BAJAJ	PULSAR 150
NC BCQ-88XX	BAJAJ	CT 100
NW BHC-22XX	HONDA	DIO SCV 110
NW BFL-84XX	HONDA	DIO SCV 110
NC BGV-40XX	HONDA	DIO SCV 110
NW BFS-09XX	HONDA	DIO SCV 110
NC BFK-59XX	HONDA	DIO SCV 110
NC BIF-01XX	HONDA	DIO SCV 110
NC BFK-55XX	HONDA	DIO SCV 110
NW BHS-73XX	HONDA	DIO SCV 110
NW BID-29XX	HONDA	DIO SCV 110
NW BDR-75XX	HONDA	DIO SCV 110
NC BCS-03XX	HONDA	DIO SCV 110
NC BAU-13XX	HONDA	DIO SCV 110
NC BIO-50XX	HONDA	DIO SCV 110
NW BIK-86XX	YAMAHA	RAY ZR
NC BIK-09XX	YAMAHA	FZ-SVER 2.0
NC BCG-43XX	YAMAHA	FZ S
NC BGG-70XX	YAMAHA	RAY ZR
NW BDR-81XX	YAMAHA	FZ S
NW BGH-24XX	YAMAHA	RAY ZR
NC BBU-10XX	HERO	HUNK
NC BIR-05XX	TVS	NTORQ
NC BGZ-47XX	TVS	NTORQ
NWBGV-48XX	TVS	XL SUPER HD
NC BDL-09XX	TVS	METRO
NWBGN-30XX	TVS	APACHE
NC BHG-94XX	TVS	NTORQ
NWBFM-59XX	RANO	Dream Mono
NWBFF-28XX	RANO	Dream 125

இடம்:–இல: 47/49. யாழ்பாண சந்தி. அநுராதபுரம். (யுனிட்டட் மோட்டர்ஸுக்கு முன்பாக)
விஸ்வா :– 0774787096 தரிந்து:–0773147608
மோட்டாரசைக்கிள் விற்பனை திகதி:–19.08.2023 காலை 10.30 மணிமுதல்
பார்வையிடும் திகதி:–18.08.2023 (காலை 8.30 முதல் 10.30 வரை)

மோட்டார்சைக்கிள் சந்தை – நாரம்மல

வாகன இல.	தயாரிப்பு	மாதிரி
NW BFK-40XX	BAJAJ	PULSAR 150
NW BHG-77XX	BAJAJ	CT 100
NW BCN-79XX	BAJAJ	CT 100
NW BFB-31XX	BAJAJ	CT 100
NW BIP-90XX	BAJAJ	PULSAR 150
NW BGY-39XX	BAJAJ	PULSAR 160
NW BET-72XX	BAJAJ	CT 100
NW BCI-10XX	BAJAJ	PULSAR 150
NW BCQ-68XX	BAJAJ	PLATINA
NW BIL-87XX	BAJAJ	PULSAR 150
NW BBI-79XX	BAJAJ	CT 100
NW BFD-57XX	HONDA	DIO
NW BHZ-13XX	HONDA	DIO
NW BIV-20XX	HONDA	DIO
NW BHV-67XX	HONDA	DIO
NW BGJ-48XX	HONDA	DIO
NW BIG-66XX	HONDA	DIO
NW BGT-25XX	HONDA	DIO
NW BCN-55XX	HONDA	DIO
NW BCM-14XX	HONDA	DIO
NW BIQ-85XX	HONDA	DIO
NW BIL-58XX	HONDA	DIO
NW BDM-11XX	HONDA	DIO
NW BHU-81XX	HONDA	DIO
NW BGO-89XX	HONDA	DIO
NW BCI-57XX	HONDA	DIO
NW BFP-12XX	HONDA	DIO
NWBIA-68XX	HONDA	NAVI
NWBID-08XX	HONDA	NAVI
NW BGM-29XX	HONDA	DIO
NW BIZ-87XX	HONDA	GRAZIA APPS
NW BGP-82XX	YAMAHA	RAY-ZR
NW BGN-49XX	YAMAHA	RAY-ZR
NW BGG-92XX	YAMAHA	RAY-ZR
NW BCG-91XX	YAMAHA	FZ-S
NW BBQ-65XX	YAMAHA	FZ-S VER 3.0
CP BIS-10XX	YAMAHA	RAY-ZR
NW BEP-56XX	YAMAHA	RAY-ZR
NWBIQ-93XX	YAMAHA	RAY-ZR
CP BEA-25XX	TVS	wego
NW BIH-94XX	TVS	NTORQ
NW BGB-83XX	HERO	MAESTRO EDGE
NW BIO-41XX	SUZUKI	BURGMAN

இடம்:–இல: 91. குருநாகல் வீதி. நாரம்மல
விஸ்வா:–0774787096 பண்டார:– 0710773722
மோட்டாரசைக்கிள் விற்பனை திகதி:–21.08.2023 காலை 10.30 மணிமுதல்
பார்வையிடும் திகதி:–21.08.2023 (காலை 8.30 முதல் 10.30 வரை)

மோட்டார்சைக்கிள் சந்தை – மாத்தறை

வாகன இல.	தயாரிப்பு	மாதிரி
SP BEK-93XX	BAJAJ	PULSAR
SP BCW-11XX	BAJAJ	PULSAR
SP BCJ-94XX	BAJAJ	PULSAR
SP BDZ-57XX	BAJAJ	PULSAR
SP BDN-81XX	BAJAJ	PULSAR
SP BBP-77XX	BAJAJ	PULSAR
SP BGY-18XX	HONDA	DIO
SP BGF 41XX	HONDA	DIO
SP BHA-14XX	HONDA	DIO
SP BFR-98XX	HONDA	DIO
SP BFL-90XX	HONDA	DIO
SP BBG-02XX	HONDA	DIO
SP BIU-87XX	HONDA	DIO
SP BHC-30XX	HONDA	DIO
SP BGG-83XX	HONDA	DIO
SP BDU-66XX	HONDA	DIO
SG BGO-46XX	HONDA	DIO
SP BET-84XX	HONDA	DIO
SP BFX-80XX	HONDA	DIO
SP BFG-04XX	HONDA	DIO
SP BGG-95XX	HONDA	DIO
SP BAJ-92XX	HONDA	DIO
SP BGH-53XX	HONDA	DIO
SP BHN-57XX	HONDA	DIO
SG BAV-72XX	HONDA	DIO
SP BFB-06XX	HONDA	DIO
SG BEK-25XX	HONDA	DIO
SP BCW-81XX	HONDA	DIO
SP BFN-90XX	HONDA	DIO
SP BEQ-57XX	HONDA	DIO
SP BGW-29XX	HONDA	DIO
SP BHO-82XX	HONDA	DIO
SP BHF-66XX	HONDA	DIO
SP BGG-38XX	HONDA	DIO
SP BDE 20XX	HONDA	DIO
SP BIG-86XX	HONDA	DIO
SP BGW-14XX	HONDA	DIO
SP BIM 71XX	YAMAHA	RAY ZR
SP BFW-93XX	YAMAHA	FZ
SP BGA-28XX	YAMAHA	FZ
SP BHU-40XX	YAMAHA	FZ
SP BGP-72XX	YAMAHA	FZ
SP BFM-20XX	TVS	WEGO
SP BHZ-72XX	TVS	NTORQ
SP BIV-92XX	TVS	NTORQ
SP BHN-76XX	TVS	NTORQ
SP YD-52XX	BAJAJ	AR4S-UG

இடம்:–இல: 578. அனகாரிக தர்மபால மாவத்தை,மாத்தறை
மோட்டாரசைக்கிள் விற்பனை திகதி:–24.08.2023 காலை 10.30 மணிமுதல்
பார்வையிடும் திகதி:–24.08.2023 (காலை 8.30 முதல் 10.30 வரை)
விஸ்வா:–0774787096 சாமர :– 0710773710
துரித அழைப்பு:–0117308080 வட்ஸ்அப்:–0710356125

வாகன சந்தையிலிருந்து எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவிப்பினறி அகற்றுவதற்கு நிறுவன முகாமைத்துவத்துக்கு அதிகாரம் உண்டு.

AMF
அசோசியேட். மோட்டர்ஸ் பைனேன்ஸ் கம்பனி பிஎல்சி
தலைமை அலுவலகம். 146. ஹெவ்லக்ஸ் வீதி. திம்பிரிகஸ்யாய
தொலைபேசி: 011-5553663

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விநோரம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஓகஸ்ட் 16ஆம் திகதி, புதன்கிழமை

வறட்சி பாதிப்புகளை கவனிக்க வேண்டும் அரசு!

நாட்டில் வெளிப்படையான பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் உணவுப் பாதுகாப்பு அதிகரித்துள்ள போதிலும், 62 சதவீதமான குடும்பங்கள், முன்னைய சேமிப்பை பயன்படுத்துதல், கடன் வாங்குதல் மற்றும் கடனில் உணவைக் கொள்வனவு செய்தல் போன்ற உத்திகளைக் கடைப்பிடிப்பதாக யுனிசெவ் அமைப்பு தனது அண்மைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

கடந்த வருடம் மே மாதத்தில் 48 சதவீதமான குடும்பங்கள் இவ்வறான உத்திகளைப் பயன்படுத்திய நிலையில், தற்போது இந்த வீதம் 62 ஆக உயர்வடைந்துள்ளதாக அவ்வமைப்பு அறிக்கை ஊடாக சுட்டிக்காட்டியுள்ளது.

இவற்றில் 26 வீதமான குடும்பங்கள் உற்பத்திகளை மேற்கொள்ளக்கூடிய (வருமானத்தை தரக்கூடிய) சொத்துகளை விற்பனை செய்தல், அத்தியாவசிய உணவு மற்றும் சுகாதார தேவைகளை குறைத்தல், குழந்தைகளை பாடசாலைக் கல்வியில் இருந்து முழுவதுமாக விலக்குதல் மற்றும் காணிகளை விற்பனை செய்தல் போன்ற உத்திகளை பயன்படுத்துவதாக அவ்வறிக்கை குறிப்பிட்டுள்ளது.

தற்போது இலங்கையில் மிதமான உணவுப் பாதுகாப்பு நெருக்கடியில் 3.9 மில்லியன் பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 10, 000 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடுமையான உணவுப் பாதுகாப்புப் பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளன. சுமார் 2.9 மில்லியன் குழந்தைகளுக்கு உயிர் வாழ்வதற்கான ஊட்டச்சத்து, சுகாதாரம், கல்வி, குடிநீர், பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு சேவைகளைப் பெறுவதற்கான மனிதாபிமான தேவி தேவையாக உள்ளது.

கடந்த வருடம் ஏப்ரலில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் எடை குறைந்த குழந்தைகளின் வீதம் 13.1 ஆகக் காணப்பட்டது. இந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் இந்த வீதம் 15.8 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேநேரம், வறட்சி நிலைமைகள் எதிர்வரும் சிறுபோக விவசாயத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். ஏற்கனவே ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 45,000 ஏக்கர் பரப்பில் மேற்கொள்ளப்பட்ட நெற்பயிர்ச்செய்கை கடுமையான வறட்சியால் அழிவடையும் அபாயத்தில் உள்ளது.

இந்தக் கடும் வறட்சியினால் அறுவடை பாதிக்கப்படுவதானது அரிசியின் மொத்த மற்றும் சில்லறை விலைகள் அதிகரிக்க வழிவகுக்கும் என்பதோடு, இது நாட்டில் தற்போதுள்ள உணவுப் பற்றாக்குறையை மேலும் அதிகப்படுத்தக் கூடும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் யுனிசெவ் அமைப்பின் ஊடாக இந்த வருடத்தின் முதல் பகுதியில் 3,60,941 குழந்தைகள் உட்பட 6,47,900 பேருக்கும் அதிமனோநோருக்கு மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் 70,571 குடும்பங்களுக்கு மனிதாபிமான பணப் பரிமாற்றங்கள் சென்றடைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் வறட்சியினால் 18 பிரதேச மத்திய நிலையங்களுக்கு நீர் விநியோகிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் 344 நீர் விநியோக மத்திய நிலையங்கள் காணப்படுகின்றன. அவற்றில் 32 நீர் விநியோக மத்திய நிலையங்கள் அபாய மட்டத்தில் காணப்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பிரதேசங்கள் வலயங்களாகப் பிரிக்கப்பட்டு நேர அட்டவணையின் அடிப்படையில் நீர் விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சில பகுதிகளில் கொள்கலன் தாங்கிகள் மூலம் நீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.வெப்பமான காலநிலையினால் ஹம்பாந்தோட்டை, பதுளை, மொனராகலை, அம்பாறை, குருணாகலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன. காடுகள் மற்றும் அதனை அண்மிய பகுதிகளில் வாழும் விலங்குகள், உயிரினங்கள் வறட்சியால் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன.

வறட்சியான காலநிலை காரணமாக நான்கு மாகாணங்களில் 90 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ, கிழக்கு, வடமேற்கு மற்றும் வடக்கு மாகாணங்களின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த 18 பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.அதன்படி, 27 ஆயிரத்து 885 குடும்பங்களைச் சேர்ந்த 89 ஆயிரத்து 485 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிகளவானோர் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளில் 21 ஆயிரத்து 714 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயிரத்து 113 பேர் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.அதேசமயம், வறட்சியான காலநிலை காரணமாக சிறுவர்கள் மத்தியில் நோய்கள் பரவி வருவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்தக் காலநிலைக்கு ஏற்றவாறு சிறுவர்களுக்கு அதிகளவு திரவ உணவு மற்றும் பானங்களை கொடுப்பது நல்லது என விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா மேலும் சுட்டிக்காட்டுகின்றார்.

வறட்சியின் தாக்கம் மேலும் தீவிரமடைய முன்னர் அது தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். விவசாயம் பாதிக்கப்பட்டு மக்கள் மத்தியில் நோய்களும் பரவுமானால் அது மேலும் நெருக்கடிகளையே தோற்றுவிக்கும் என்பதை அரசாங்கம் கவனத்திற்கொள்ளவேண்டும்.

பெருந்தன்மை எனும் பெருங்குணம்!

முனைவர் என். மாதவன்

மனிதர்கள் தம் தன்மையுடன் வாழ்வதை மனிதத்தன்மை என்கிறோம். அடுத்தவர் குற்றங்களை மன்னித்து கூடுதல் களிவோடு நடத்தி அவர்களைப் பண்படுத்தும் குணம் பெருந்தன்மை எனக் கொள்ளலாம். மனிதத்தன்மையையும் பெருந்தன்மையையும் தான்டி, மகாகவி பாரதியாரைப்போல் 'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்று கூறுவோரும் உளர்.

ஒருவர் தொலைபேசியில் பேசும்போது வேறொருவரைப் பற்றிக் குறைபட்டுக் கொள்வதைக் கேட்டிருப்போம். 'வீட்டில காய்த்த வெண்டைக் காயை சுமந்துகிட்டு போய் கொடுக்கிறேன். அப்படியே வாங்கி வைச்சிக்கிட்டான். நன்றி, இவ்வளவு தூரம் எனக்காக சுமந்து வந்தீங்க. இப்படி அப்படின்னு ஒரு வார்த்தை சொல்லலப்பா' என்பார். மறுமுனையில் 'இங்க இல்லாத வெண்டைக்காயா? இதை கொண்டு வரலேனு யாரு அழுதா' இப்படிப்பட்ட வார்த்தைகள் வரலாம்.

இச்சூழலில் பயன்பெற்றவர் கூடுதல் அனுசரணையோடு, 'ஆஹா, ஆயிரம் எடத்திலேருந்து வெண்டைக்காய் வந்தாலும் உங்க தோட்டத்தில காய்க்கற வெண்டைக்காயோட ருசியே தனி. ரொம்ப நன்றி' - இப்படி அவர் கூறியிருந்தால் இருவரிடையேயுமான நெருக்கம் அதிகரித்திருக்கும்.

மனிதர்கள் உணர்ச்சிபூர்வமாக வாழ்பவர்கள். ஒவ்வொரு நொடியிலும் ஏதாவது ஒரு வகையில் உணர்வுகளை வெளிப்படுத்திக் கொண்டே இருப்பவர்கள். அவ்வாறு தாம் வெளிப்படுத்தும் ஒவ்வொரு உணர்ச்சிக்கும் அடுத்தவரின் உணர்வோட்டங்களை மதிப்பிடத் துடிப்பவர்கள்.

மேடைகளில் பேசும் பேச்சாளர்களாயிருப்பின் முக்கிய தருணத்தில் கைதட்டலை எதிர்பார்ப்பர். பாடகர்களாயிருப்பின், பார்வையாளர்கள் தலையை ஆட்டி ரசிக்கும்போது மிகவும் உற்சாகமடைவர். எழுத்தாளர் ஒருவரின் எழுத்து பத்திரிகைகளில் வெளியானவுடன் எங்கோ ஒரு மூலையிலிருந்து கிடைக்கும் பாராட்டு வார்த்தைகள் அவரை உற்சாகப்படுத்தும். பாராட்டுதல் மனிதர்கள் இயல்பாகச் செய்யக்கூடியதுதான் என்றாலும் இதனால் பயனடைவோரின் பனித்திறன் நிச்சயம் கூடும்.

இப்படி பொது நிகழ்வுகளுக்கு செய்வது போல தனிப்பட்ட உரையாடல்களுக்கு கைதட்டி விசிலடித்து ஆர்ப்பரிக்க இயலாது; அது தேவையும் இல்லை. நிறுவனங்களில் பணிச்சூழலில் உடன் பணிபுரிவோரின் மனவோட்டம் நம்மால் மேம்பாடு அடையாவிட்டாலும், அவர்களின் மனம் வாட்டமடையாமல் இருந்தால் கூட போதுமானது.

பொதுவாக நிறுவனங்களில் இணையான பதவிகளில் உள்ளோர் இடையே நடக்கும் உரையாடல் ஒருவருக்கொருவர் புரிந்துகொண்ட மனப்பாங்கில் நடைபெறும். அங்கே பெரும்பாலும் அனுசரணைக்கு கூடுதல் இடமிருக்கும். ஆனால், உயர்பதவியிலிருப்போர் அதற்கடுத்த பதவியிலிருப்போர் இடையே இயல்பான பகிர்வுகள் பொதுவாக நடைபெறுவதில்லை.

பெரும்பாலும் உயரதிகாரி ஒரு முடிவெடுத்துவிட்டு அதனை தனக்கு அடுத்த நிலையிலிருப்போர் நிறைவேற்றவேண்டும் என எதிர்பார்ப்பார். இப்படி நடந்துகொள்ளாமல் அடுத்த படிநிலையிலிருப்பவர் என்ன மனநிலையில் உள்ளார் என அறிந்து, தனது நோக்கத்தை நிறைவேற்ற முனையலாம். வெவ்வேறு படிநிலைகளில் இருக்கும் இருவர், வாதிட முனைவதை விட எது சரி என்பது குறித்துக் கலந்துரையாட வேண்டும்.

இப்படிப்பட்ட கலந்துரையாடல் நடைபெற, இருவரும் தம் பதவிகளை மறந்து மனிதர்கள் என்ற நிலையில், பெருந்தன்மையுடன் செயற்பட வேண்டும். அப்படி செயற்படும் சூழலில் எது சரி என்பது புரியவரும். அப்படி நடைபெறும் நிறுவனங்களில் பணித்திறன் மேம்பாடு அளவுக்கதிகமாகவே இருக்கும்.

இதை விடுத்து, 'என்னை, எனது உயரதிகாரி எப்படி அடிமை மனநிலையில் நடத்துகிறாரோ அப்படியே நான் எனக்கு அடுத்திருப்போரை நடத்துகிறேன்' என்று ஒருவர் கூறினால், அது உளவியல் ரீதியாக எப்படிப்பட்ட பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதை சிந்திக்க வேண்டும்.

தனது கருத்துத்தான் சரி என்பதை நிறுவும் வசதியும் - தகுதியும் அவருக்கு இருக்கிறது மறுப்பதற்கில்லை.

ஆனால், அவருக்கு அடுத்த படிநிலையிலிருப்பவர் தினம் தினம் அதே பணிச்சூழலில் உழல்பவர். எனவே, அந்தப் பணிச்சூழலில் எழும் சிக்கலுக்கு உயரதிகாரியைவிட எளிமையான தீர்வு சொல்ல வல்லவராக அவர் இருப்பார்.

தமது பணிச்சூழலில் சிக்கல்கள் மிகும்போதே அதற்கான தீர்வுகளையும் யோசித்துக்கொண்டிருப்பவர், வேறு யாரையும்விட எளிமையான தீர்வு சொல்வோராய் மாறுவார். இதனால் அவர் பணியில் மேலும் பரிணாமமடைய இயலும்.

ஆனால், தம் பணியாளர்களுக்கு சிக்கல்களுக்கான தீர்வுகளை யோசிக்க நேரமும் மனநிலையும் கிடைக்கும் சூழலை நிறுவனங்கள் அமைத்துத்தரவேண்டும். இதற்கு மேலாளர்களுக்கு பெருந்தன்மை அதிகமாக இருக்கவேண்டும். அந்த பெருந்தன்மைக்குப் பாத்திரமானோராய் பணியாளர்கள் தங்களை மாற்றிக்கொண்டு பணியாற்றவேண்டும்.

நமது உணர்வுகளை மற்றவர்கள் புரிந்து நடந்துகொள்ள வேண்டும் என எதிர்பார்ப்பவர்கள், மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து நடப்போராக மாற முயல வேண்டும். எல்லா நேரமும் தன்னையே பிறர் சிறப்பிக்க வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல் வாய்ப்புள்ளபோதெல்லாம் உடனிருப்போரைப் பாராட்டும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளவேண்டும். இதுவும் பெருந்தன்மையான செயற்பாடுதான்.

திருமண நிகழ்வில் மணமகளும் மணமகனும்தான் முக்கிய மானவர்கள். அனைவரது கவனத்தையும் ஈர்க்கும் வண்ணம் அவர்கள் ஒப்பனை செய்துகொள்வது பொருத்தமானது. ஆனால், திருமண விழாவுக்கு வருவோர் அனைவருமே அவர்களுக்கிணையாக ஒப்பனையுடன் வந்தால் அவர்களது முக்கியத்துவம் குறைவது இயல்புதானே? நல்லவேளையாக மாலைகள் அணிவித்து அவர்களை வேறுபடுத்திக் காட்டும் நடைமுறை உள்ளது.

உரிய இடங்களில் உரியோர் கவனம் பெறுவதை உறுதிசெய்வதும் பெருந்தன்மைக் குணத்தின் மற்றொரு அம்சம். பெருந்தன்மை எனும் நற்குணத்தின் தாக்கம் அளவிடற்கரியது.

நன்றி - தினமணி

நக்கல் நமசிவாயம்

மக்களுக்கு நிவாரணம் கொடுக்க வந்த அஸ்வெசும சபையின் தலைவரே இராஜினாமா செய்துபோட்டார்..இப்போது அவருக்கே ஏதாவது நிவாரணம் கொடுக்க வேண்டிவரும் போலக்கிடக்குது..!

பிரெஞ்சு பாண் தயாரிக்கும் போட்டியில் வெற்றி பெற்ற இளைஞனுக்கு கௌரவம்

பு.கஜிந்தன்

பிரான்ஸில் ஆண்டு தோறும் நடைபெறும் பிரெஞ்சு பாண் (baguette) தயாரிக்கும் போட்டியில் வெற்றிபெற்ற இலங்கைத் தமிழரான தர்ஷன் செல்வராஜாவை கௌரவிக்கும் நிகழ்வு (14) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் பணிமனையில் இக் கௌரவிப்பு இடம்பற்றது.

இதன்போது தர்ஷனுக்கு மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதில் யாழ்ப்பாண மாவட்ட பேக்கரி உரிமையாளர்கள் கலந்துகொண்டனர்.

உலகின் மிக பிரபல உணவுகளில் ஒன்றாக பிரெஞ்சு பாண் உள்ளது. இந்தப்

போட்டியில், வெற்றியாளராக இவ்வாண்டு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இலங்கை, வவுனியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட தர்ஷன் பாரிஸில் வாழ்ந்து வருகிறார். அங்குள்ள பேக்கரி ஒன்றில் பணியாற்றி வருகிறார்.

இந்த ஆண்டின் பிரெஞ்சு பாரம்பரிய சுவையான பாண் தயாரித்து இவ்வாண்டுக்கான வெற்றியாளராக மாறியுள்ளார்.

126 போட்டியாளர்களில் தர்ஷன் செல்வராஜா வெற்றிபெற்றுள்ளார்.

அதேவேளை, பிரான்ஸின் ஜனாதிபதி மாளிகையான எலிசேக்கு ஒரு வருடத்திற்கு தேவையான பான் வழங்கும் வாய்ப்பும் தர்ஷனுக்கு கிடைத்துள்ளது.

இன்றைய நாளில்...

* 1856 – இலங்கையில் ரெயில்வே சட்டம் சட்டவாக்கப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.
* 1891 – ஆசியாவிலேயே உருக்கினாலான முதலாவது தேவாலயம், சென். செபஸ்தியான் பேராலயம், மணிலாவில் திறந்து வைக்கப்பட்டது.
* 1906 – சிலியில் 8.2 அளவு நிலநடுக்கம் ஏற்பட்டதில் 3,882 பேர் உயிரிழந்தனர்.
* 1946 – கல்கத்தாவில் இந்து-முஸ்லிம் கலவரங்கள் ஆரம்பமாயின. அடுத்த 72 மணி நேரத்தில் 4,000 பேர் உயிரிழந்தனர்.

அமைச்சரவைத் தீர்மானங்கள்

1 12 03

அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

01.இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் அம்பாந்தோட்டை ஓயில் நிரூபயினரி (பிறைவேட்) லிமிட்டெட் இற்கிடையிலான ஒப்பந்தம்

ஏற்றுமதி சந்தைக்காக மாத்திரம் நாளொன்றுக்கு 4,20,000 பரல்கள் கொள்ளவுடன் சுடிய பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையமொன்றை அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நிறுவுவதுக்காக இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் அம்பாந்தோட்டை ஓயில் நிரூபயினரி (பிறைவேட்) லிமிட்டெட் இற்கிடையில் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதுக்காக 2019.09.17 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுக்காக 50 வருட நீண்டகால குத்தகையின் அடிப்படையில் 1,200 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனாலும், உத்தேச கருத்திட்ட மூலம் குறித்த காணி குத்தகை அடிப்படையில் பெறப்படாமையால் இதுவரை கருத்திட்டம் அமுலாடுத்தப்படவில்லை. கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் பற்றி கருத்திட்ட முன்மொழிவாளருக்கு பல தடவைகள் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தும் அதற்குப் பதிலளிக்கவில்லை. இருதரப்பினர்களுக்குமிடையே மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கமைய கருத்திட்ட முன்மொழிவாளர் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையால் குறித்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

02.ரெறிவெலப்பிட்டி மின் உபநிலையத் திலிருந்து நுகேப சந்தி வரை 33 கிலோ வோல்ட் (கி.வோ.) இரட்டை சுற்று சீ.ரா கோபுரத்தில் மின்கம்பிப் பாதையை அமைத்தல்

முத்துராஜவெல சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசத்தில் முதியன்சே கால்வாய்ப் பகுதியில் ரெறிவெலப்பிட்டி மின் உபநிலையத்திலிருந்து நுகேப சந்தி வரை 33 கிலோவோல்ட் (கி.வோ.) இரட்டை சுற்று சீ.ரா கோபுரத்தில் மின்கம்பி பாதையை அமைத்தல், அனுமதி பெற்ற செயற்பாடாக வெளியிடுவதற்கு இயலுமாறும் வகையில் தற்போதுள்ள 2006.10.13 ஆம் திகதிய 1466/26 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தல் திருத்தப்பட்டு புதிய வர்த்தமானியை வெளியிடுவதுக்காக 2022.12.19 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த மின்கம்பிப் பாதையை முதியன்சே கால்வாய்ப் பகுதியில் அமைப்பதுற்குப் பதிலாக சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசத்தின் எல்லையில் நிர்மாணிப்பதுற்கான அனுமதியை வழங்க முடியுமென சுற்றாடல் அதிகாரசபை இலங்கை மின்சார சபைக்கு அறிவித்துள்ளது. அதற்கமையை, முன்மொழியப்பட்டுள்ள மாற்று வழியூடாக மின்கம்பிப் பாதையை அமைப்பதுற்கு இயலுமாறும் வகையில், குறித்த பணிகள் அனுமதி பெறப்பட்டவையாக வெளியிட்டு 2006.10.13 ஆம் திகதிய 1466/26 ஆம் இலக்க விசேட வர்த்தமானியைத் திருத்தம் செய்து புதிய அறிவித்தலொன்றை மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் வெளியிடுவதுற்காக சுற்றாடல் அமைச்சருக்கு அதிகாரத்தை வழங்குவதுற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

03.இலங்கையின் தேசிய விருப்புங்கள் மற்றும் சர்வதேச பிரதி விம்பத்தை ஊக்குவிப்பதற்காக ஒருங்கிணைந்த மூலோபாய தொடர்பாடல் நிகழ்ச்சித்திட்டம்

உகைனாவிய ரீதியாகவும் மற்றும் பிராந்திய ரீதியாகவும் எழுகின்ற சவால்களுக்கு முகங்கொடுப்பதுற்கு இயலுமாகும் வகையில் இலங்கையின் சர்வதேச பிரதிவிம்பத்தை மேம்படுத்தல் மற்றும் சர்வதேச தொடர்புகளை பலப்படுத்திக் கொண்டு சரியான வெளிநாட்டுக் கொள்கையொன்றை சமமான வகையில் முகாமைத்துவப்படுத்திக் கொள்வதற்காக மூலோபாய தொடர்பாடல் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமையை, இலங்கையின் தேசிய விருப்பங்கள் மற்றும் பிரதிவிம்பத்தை மேம்படுத்துவதுற்காக வெகுஜன ஊடக அமைச்சும் வெளிவிவகார அமைச்சும் ஒருங்கிணைந்து தொடர்பாடல் வேலைத்திட்டமொன்றை நடத்துவதுற்காக வெகுஜன ஊடக அமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

04.குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை (101 ஆம் அத்தியாயம்) திருத்தம் (முன்னிளக்க வழக்கு நடவடிக்கைகள்)

2017 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முன்னிளக்க வழக்கு நடவடிக்கைகளின் புதிய ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்திய பின்னர் உருவாகியுள்ள பிரச்சினைகள் மற்றும் சவால்களுக்குத் தீர்வு காண்பதுற்கும் வழக்கு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதுற்கும் தீர்ப்பை வழங்குவதுற்கும் இயலுமாறும் வகையில் காலத்தைக் குறைப்பதுற்கு இயலுமாகும் வகையில் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையைத் திருத்தம் செய்வதுற்காக 2021.09.27 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் திருத்தச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதலும் கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைய, குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதுற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதுற்காகவும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

05.காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலக சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ள வழிகாட்டி

2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும் மற்றும் பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் 11(இ) பிரிவின் ஏற்பாட்டுக்கமைய குறித்த அலுவலகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகளை உள்ளடக்கக்கூடியவையான விதிகளையும் வழிகாட்டு நெறிகளையும் வழங்குதல் வேண்டும். அதற்கமைய, சட்டமா அதிபரால் வழங்கப்பட்டுள்ள அவதானிப்புகள் மற்றும் சிபாரிசுகளைக் கருத்திற்கொண்டு குறித்த வழிகாட்டுநெறி தயாரிக்கப்பட்டுள்ளதுடன், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த குறித்த வழிகாட்டுநெறிக்கு அமைச்சரவை உடன்பாடு வழங்குவதுற்குத் தீர்மானித்துள்ளது.

06.இருதரப்பு மற்றும் பல்தரப்பு ஒப்பந்தங்களை வலுவாக்கம் செய்தல்

தேசிய அபிவிருத்திக்காக அவசியமெனத் தீர்மானிக்கப்படுகின்ற இருதரப்பு மற்றும் பல்தரப்பு ஒப்பந்தங்களை மேற்கொண்ட பின்னர் ஏற்படைய தரப்பினர்களின் உடன்பாடுகளின்றி குறித்த உடன்படிக்கைகளிலிருந்து விடுபடுவதுற்கு இயலாத வகையிலான ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக சட்டவரைவுக்கப்படல் வேண்டுமென 2023.05.22 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தயாரிக்கப்பட்டுள்ள அடிப்படை வரைவுக்கமைய சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதுற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

07.தேசிய உற்பத்தித்திறன் ஆணைக் குழுவைத் தாபித்தல்

நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக எழுகின்ற தாக்கங்களைக் குறைப்பதை இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்துகின்ற மறுசீரமைப்புகள் மூலம் அடையப்பெறுகின்ற பயன்களை உயர்த்த மட்டத்திற்குக் கொண்டு வருதல் மற்றும் குறித்த மறுசீரமைப்புகளில் இடைக்கால மற்றும் நீண்டகால நிலைபேற்றுத்தன்மையை உறுதிப்படுத்துவதுற்காக பொருளாதாரத்தின் சகல பிரிவுகளிலும் உற்பத்தித்திறனை விருத்தி செய்ய வேண்டியுள்ளது. ஆனாலும், உற்பத்தித்திறன் தொடர்பான பிரச்சினைகளை முறைதாற்த வகையில் செயற்படுவதுற்காக சட்டரீதியாக பொறுப்புக் கூறவேண்டிய நிறுவனமொன்று எமது நாட்டில் இல்லை. அதனால், உற்பத்தித்திறன் தொடர்பான பிரச்சினைகளில் கவனம் செலுத்தவதுற்காக மற்றும் ஆய்வுகள் மூலம் உருவாகின்ற சான்றுகள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் கொள்கை விதிகளை அரசுக்கு பரிந்துரைப்பதுற்காக சுயாதீன நிறுவனமாக தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழுவை தாபிக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் நிறுவனக் கட்டமைப்பைத் தீர்மானித்தல், குறித்த ஆணைக்குழுவைத் தாபிப்பதுற்கான சட்டவாக்கம் மற்றும் குறித்த ஆணைக்குழுவை தாபித்தல் தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டிய வேறு விடயங்கள் பற்றி ஆராய்ந்து அமைச்சரவைக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதுற்காக நியுனர் குழுவொன்றை நியமிப்பதுற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

08.கறுவா அபிவிருத்திக்கான புதிய திணைக்களமொன்றை தாபித்தல்

சிறு ஏற்றுமதிப் பயிராக வெளிநாட்டு செலாவனியை ஈட்டுவதுற்காக கறுவாப்பயிர் வழங்குகின்ற பங்களிப்புகளைக் கருத்திலி கொண்டு குறித்த பயிரை வனிகப் பயிராக மேம்படுத்த வேண்டிய தேவையை 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட யோசனையில் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். அதற்கமைய, கறுவா உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்குத் தேவையான வதிகளை வழங்குதல், கறுவா உற்பத்திகளின் தரப்பண்பை அதிகரித்தல், பெறுமதி சேர்த்தல், உற்பத்தி பன்முகப்படுத்தல், போன்ற நடவடிக்கைகளுக்காக கறுவாச் செய்கையாளர்கள், விநியோகத்தர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்குத் தேவையான வதிகளை வழங்குவதுற்காக கறுவா அபிவிருத்தி திணைக்களம் எனும் பெயரில் புதிய திணைக்களமொன்றைத் தாபிப்பதுற்காக ஜனாதிபதி மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

09.1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்

பயணிகள் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட ஒருசில பொருட்களுக்கான மட்டுப்பாடுகளைத் தொடர்ந்தும் பேணியவாறு, இறக்குமதிகளை மட்டுப்படுத்துவதுற்காக விதிக்கப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் மூலம் தற்காலிகமாக இறக்குமதி தடைசெய்யப்பட்டுள்ள மேலும் பலவகைப் பொருட்களுக்கான இறக்குமதி மட்டுப்பாடுகளை நீக்குவதுற்கு ஏற்புடைய தரப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்களில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. அதற்கான ஏற்பாடுகளை வகுத்து 2023 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) ஒழுங்குவிதிகள், 2023.07.20 ஆம் திகதிய 2341/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய, 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய குறித்த ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதுற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

10.கதிர்காமப் புனித பூமியின் உத்தேச திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள அரச யாத்திரிகர் ஓய்வு விடுதிக் கட்டடத்தை 05 வருடங்களுக்கு பராமரித்துப் பேணிச் செல்வதுற்காக கிரிவெஹர ரஜமஹா விகாரைக்கு ஒப்படைத்து குறித்த காலப்பகுதி முடிவடைந்த பின்னர் யாத்திரிகர் விடுதி மீண்டும் பௌதீகத் திட்டமிடல் திணைக்களத்திற்குப் பெறப்பட்டுள்ளது.

குறித்த யாத்திரிகர் விடுதியை மீண்டும் கிரிவெஹர ரஜமஹா விகாரைக்கு வழங்குமாறு கிரிவெஹர ரஜமஹா விகாராதிபதியால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கட்டடத்தின் பராமரிப்பு, திருத்த வேலைகள், மற்றும் ஏற்புடைய ஒப்பந்தம் செய்யப்படுகின்ற சேவைகளுக்கான செலவுப் பட்டியல்கள் கிரிவெஹர ரஜமஹா விகாரையால் ஈடுசெய்கின்றவாறு, புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் 05 வருடங்களுக்கு குறித்த யாத்திரிகர் விடுதியை கிரிவெஹர ரஜமஹா விகாரைக்கு வழங்குவதுற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

11.கட்டாரின் டோஹா ஹமட் விமான நிலையம் மற்றும் குவைத் சர்வதேச விமான நிலையத்தில் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமானசேவைகள் கம்பனியின் விமானங்களுக்கான எரிபொருள் விநியோக ஒப்பந்தத்தை வழங்கல்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமானசேவைகள் கம்பனிக்கான கட்டாரின் டோஹா ஹமட் விமான நிலையம் மற்றும் குவைத் சர்வதேச விமான நிலையத்தில் தற்போது காணப்படுகின்ற எரிபொருள் விநியோக ஒப்பந்தம் 2023.10.31 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. அரச பெறுகைச் செயன்முறை வழிகாட்டல்களுக்கு அமைவாக குறித்த 02 விமான நிலையங்களிலுள்ள ஒரேயொரு விமான எரிபொருள் விநியோத்தரான Qatar Fuel Company மற்றும் Kuwait Aviation Fueling Company (KAFCO)ஆகிய விநியோகத்தர்களிடம் விலைமுறி கோரப்பட்டுள்ளது. அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய கட்டாரின், நேரடி ஒப்பந்தமாக டோஹா ஹமட் சர்வதேச விமான நிலையத்தில் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமானசேவைகள் கம்பனியின் விமானங்களுக்கான எரிபொருள் விநியோகத்தர்களுக்கு 24 மாதகால ஒப்பந்தத்தை வழங்குவதற்கு துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மோட்டார்சைக்கிள் சந்தை – கொட்டாவ

வாகன இல.	தயாரிப்பு	மாதிரி	வாகன இல	தயாரிப்பு	மாதிரி
CP BFE - 45XX	BAJAJ	CT 100	WP BGL- 78XX	YAMAHA	FZ
NW BHS- 30XX	BAJAJ	CT 100	WP BFZ -46XX	YAMAHA	RAY ZR
WP BER -96XX	BAJAJ	CT 100	UP BBB-15XX	YAMAHA	FZ
WP BCP- 31XX	BAJAJ	PULSAR	WP BGM -42XX	YAMAHA	RAY ZR
WP BBD-25XX	BAJAJ	PLATINA	WP BHA- 82XX	YAMAHA	RAY ZR
WP BGM -19XX	BAJAJ	AVENJER	WP BFE- 62XX	YAMAHA	RAY ZR
NW BGI -14XX	BAJAJ	PULSAR 150	WP BCY-87XX	YAMAHA	FZ 16
SP BAL-84XX	BAJAJ	PULSAR	CP BFY -86XX	YAMAHA	FZ
WP BCI-72XX	BAJAJ	PULSAR	WP BEQ-40XX	YAMAHA	FZ VERSION 02
WP BCE- 66XX	BAJAJ	PULSAR	CP BIG -71XX	YAMAHA	FZ
WP BED -46XX	BAJAJ	CT 100	SG BFF -17XX	YAMAHA	FZ
WP BDK-41XX	BAJAJ	CT 100	WP BFY- 13XX	YAMAHA	RAY ZR
WP BCF -24XX	BAJAJ	PULSAR	WP BGC-11XX	YAMAHA	FZ
WP BCB -59XX	BAJAJ	PULSAR 135	WP BGD- 06XX	YAMAHA	FZ S VER 2.0
SG BDZ -73XX	BAJAJ	PULSAR 150NS	SP BGI -87XX	YAMAHA	RAY ZR
WP BGZ-50XX	BAJAJ	CT 100	WP BGA-69XX	YAMAHA	RAY ZR
NW BFS - 96XX	HONDA	DIO	WP BHE -03XX	YAMAHA	FZ VERSION 02
CP BFF -34XX	HONDA	DIO	WP BIR-90XX	YAMAHA	RAY ZR
WP BCH -48XX	HONDA	DIO SCV 110	NW BIN -60XX	TVS	RAY ZR
NW BHN- 37XX	HONDA	DIO	SG BIH -14XX	TVS	NTORQ
NW BDO -57XX	HONDA	DIO	WP BGZ- 50XX	TVS	NTORQ
NW BFW- 17XX	HONDA	DIO SCV 110	WP BIZ-98XX	TVS	NTORQ
WP BGY -90XX	HONDA	DIO SCV 110	WPBIT-62XX	TVS	NTORQ
NW BEV -87XX	HONDA	DIO	WP BCC -07XX	TVS	WEGO
SP BGA -30XX	HONDA	DIO SCV 110	WP BIE-90XX	TVS	NTORQ
CP BHL -08XX	HONDA	DIO	WP BHH-24XX	TVS	NTORQ
SP BHG -90XX	HONDA	DIO	WP BGZ-19XX	TVS	NTORQ
NW BGN -56XX	HONDA	DIO	SGBIS-33XX	TVS	NTORQ
CP BIG- 63XX	HONDA	DIO	NW BEM-34XX	TVS	WEGO
WP BHL-10XX	HONDA	DI	WP BHG -95XX	TVS	NTORQ
WP BGG -06XX	HONDA	DIO	WP BHF -50XX	TVS	NTORQ
WP BIG- 36XX	HONDA	DIO	SP BDV -33XX	HERO	PLESURE
WP BDN -09XX	HONDA	DIO	WP BGW- 94XX	HERO	MAESTRO EDGE
WP BCX- 32XX	HONDA	DIO	WP BEJ -16XX	HERO	PLESURE
SGBGH-85XX	HONDA	DIO	WP BGK-29XX	HERO	MAESTRO EDGE
UP BGU -85XX	HONDA	DIO	WP BFW-91XX	HERO	MAESTRO EDGE
WPBIR-24XX	HONDA	DIO	WP BHJ -70XX	HERO	MAETRO EDGE
WPBIN-21XX	HONDA	DIO	WP BHT -12XX	HERO	MAESTRO EDGE
UP BGC-92XX	HONDA	DIO	UP BGH- 08XX	HERO	MAESTRO EDGE
WP BGN- 50XX	HONDA	DIO	WP BGT -98XX	HERO	MAESTRO EDGE
WP- BGH-40XX	HONDA	DIO	WP BGX -08XX	HERO	MAESTRO EDGE
WP BEU-90XX	HONDA	DIO	WP JF -99XX	BAJAJ	2stroke
WPBIB-10XX	HONDA	NAVI	WP QT-36XX	BAJAJ	4stroke
WP BGA- 49XX	HONDA	DIO	UP YS -05XX	BAJAJ	4stroke
WP BIP -46XX	HONDA	DIO	WP QP- 44XX	BAJAJ	4stroke
SP BFS-97XX	HONDA	DIO	CP QP-08XX	BAJAJ	4stroke
WP BHZ- 53XX	HONDA	DIO	NW QN-04XX	BAJAJ	4stroke
WP BIW -58XX	HONDA	DIO	CP YP-70XX	BAJAJ	4stroke
WP BHI-28XX	HONDA	DIO	CP QT-35XX	BAJAJ	4stroke
WP BIG -25XX	HONDA	DIO	CP YK-43XX	BAJAJ	4stroke
WP BFB- 04XX	HONDA	DIO	CP QQ-64XX	BAJAJ	4stroke
WP BCA- 71XX	HONDA	DIO	CP QU-87XX	BAJAJ	4stroke
SP BGE -61XX	HONDA	DIO	WP YL -02XX	BAJAJ	4stroke
WP BFZ -56XX	HONDA	DIO	CP YX -40XX	BAJAJ	4stroke
SP BFI-93XX	HONDA	DIO	WP QS-97XX	BAJAJ	4stroke
WP BDW- 89XX	HONDA	DIO	WP AAB-77XX	BAJAJ	4stroke
WP BEX- 89XX	HONDA	DIO	CP QO-34XX	BAJAJ	4stroke
WP BIA- 68XX	HONDA	NAVI	WP QE -18XX	BAJAJ	4stroke
SG BFB -40XX	HONDA	NAVI	CP QL-94XX	BAJAJ	4stroke
WP BGR- 91XX	HONDA	DIO SCV 110	CP QE-75XX	BAJAJ	4stroke
WP BGV -54XX	HONDA	DIO	SG QL -60XX	BAJAJ	4stroke
WP BER-11XX	HONDA	DIO	WP QW- 26XX	BAJAJ	4stroke
SP BGV- 02XX	HONDA	DIO	WP AAS-81XX	BAJAJ	4stroke
NW BHY- 01XX	HONDA	DIO	SG QK-19XX	BAJAJ	4stroke
WP BFH -89XX	HONDA	DIO	WP- QQ-18XX	BAJAJ	4stroke
UP BIH-38XX	HONDA	DIO	CP QS-83XX	BAJAJ	4stroke
WP BHA- 97XX	HONDA	DIO	WP ABH-05XX	BAJAJ	4stroke
SP BGG -06XX	HONDA	DIO	CP QR-67XX	BAJAJ	4stroke
WP BFB-91XX	HONDA	DIO	NW QP -42XX	BAJAJ	AUTO AR4S
NW BIK -75XX	HONDA	DIO	WP YX-26XX	PIAGIO	APE
NW BEE- 83XX	HONDA	DIO	SP GV -30XX	TOYOTA	RAV 04
NW BCJ -23XX	HONDA	DIO	65-57XX	TOYOTA	STARLET
SG BFO -03XX	HONDA	DIO	CP KD-37XX	SUZUKI	SHIFT
WP BFC-65XX	HONDA	DIO	CP KG -73XX	CHEVROLET	AV-EO
WP BGC -96XX	HONDA	DIO	227-30XX	MAZDA	TITAN
SP BDH -54XX	HONDA	DIO SCV 110	WP KS-76XX	VIVA	ELITE
WP BHO -21XX	HONDA	DIO	WP HA- 75XX	MERCEDES-BENZ	C200KOMORESSOR
WP BIU -38XX	HONDA	DIO SCV 110	WP DAB- 45XX	TATA	ACE EX 2
WP BCK -84XX	HONDA	FZ	WP ZB-17XX	JCB	3CX
WP BDJ-16XX	YAMAHA				

யாழ்.பல்கலை மாணவர்கள் பாராளுமன்றத்துக்கு விஜயம்

சாவகச்சேரி நிருபர்

யாழ்ப்பாண பல்கலைக்கழக அரசறிவியலுறை இறுதியாண்டு மாணவர்கள் கற்கை சார் விடயமாக கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை பாராளுமன்றத் துக்குச் சென்றிருந்தனர்.

இதன்போது பாராளுமன்ற செயற்பாடுகள், ஒழுங்குவிதிகள், அமர்வுகள், பாராளுமன்ற சிறப்புரிமைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக அவர்கள் கேட்டறிந்து கொண்டனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக அரசறிவியலுறை பேராசிரியர் கலாநிதி கணேசலிங்கம் தலைமையில் சென்ற மாணவர்கள் பாராளுமன்றக் குழுக்களின்

பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதனையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அதேநேரம், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவிகளும் கடந்த வெள்ளிக்கிழமை பாராளு மன்ற செயற்பாடுகளைப் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

16-08-2023, 17-08-2023 ஆகிய திகதிகளில் (காலை 8.30 முதல் 4.30 வரை)
இலக்கம்.17/1, பின்ஹேன சந்தி, ஹொரண வீதி,
கொட்டாவையில் அமைந்துள்ள எமது நிறுவன
வாகன வளாகத்தில் பார்வையிடலாம்

விற்பனை திகதி: 18 –08– 2023 | காலை 10.30 மணிக்கு
வாகன சந்தையிலிருந்து ஏற்றப்பெறு வாகனத்தையும் முன்னறிவித்தலின்றி அகற்றுவதற்கு நிறுவன முகாமைத்துவத்துக்கு அதிகாரம் உண்டு.

விஸ்வா:– 0774787096 சுஜீவா:–0712591067

துரித அழைப்பு:–0117308080 வட்ஸ்அப்:–0710356125

AUCTIONEER
Black Tie Service with True Aloha!
ඒ එන් අල්ගෙවත්ත වික්‍රමසිංහ(ර්)
A N ALGEWATHTHA AUCTIONEER
#333, Janajaya City, Rajagiriya.
+94 71 790 5 790 I info@anaauctioneer.com
www.anaauctioneer.com

AMF
அசோசியேட், மோட்டர்ஸ் பைனேன்ஸ் கம்பனி பிஎல்சி.
தலைமை அலுவலகம்,
146, ஹைவ்லொக் வீதி, திம்பிரிகஸ்யாய
தொலைபேசி: 011-5553663

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ ஏற்பாடுகள்

யாழ். நிருபர்

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ திருவிழா எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 நாட்களுக்கு திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இந்நிலையில், ஆலயத்தைச் சூழவுள்ள பகுதிகளில் திருவிழா ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆலயச் சூழலில் பக்தர்கள் இளைப்பாறுவதற்கான கொட்டகைகளும் தாக சாந்திநிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

ஆலய வீதியைச் சுற்றி சிவப்பு, வெள்ளைக் கொடிகள் ஆலயத்தினால் கட்டப்பட்டு வருகின்றன. கொடிகள் கட்டப்பட்டு எல்லைப் படுத்தப்படும் ஆலயச் சூழலில் வியாபாரநடவடிக்கைகள், யாசகம் பெறல், விளம்பர நடவடிக்கைகள் என்பவை மேற்கொள்ளத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், ஆலயத்திற்கு வருவோர் அப்பிரதேசத்துக்குள் காணிகளுடன் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

செஞ்சோலை படுகொலைகள் தொடர்பில் சர்வதேச விசாரணை இடம்பெற்று நீதி உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்கிறார் முன்னாள் எம்.பி. சரவணபவன்

சாவகச்சேரி நிருபர்

படுகொலைகள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் இடம்பெற்று பாதிக்கப்பட்ட தரப்புகளின் நீதி உறுதிப்படுத்தப்படவேண்டும் - என பாராளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (14) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற செஞ்சோலை படுகொலை நினைவேந்தல் நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்;

"இன்று (நிங்கள்) செஞ்சோலை படுகொலை நினைவூநாள். ஒரே நேரத்தில் மொத்தமாக 61 பேர் கொல்லப்பட்டனர். இதில் மாணவர்கள் மாத்திரம் 54 பேர் அரச இயந்திரத்தால் படுகொலை செய்யப்பட்டனர்.

இதுவரை இந்தக் கொலைகள் தொடர்பில் சர்வதேசத்திலோ அல்லது உள்ளூரிலோ எந்தவிதமான விசாரணைகளும் இடம்பெறவில்லை; நீதியும் கிடைக்கவில்லை. இது மாத்திரமல்ல, இதுபோல் நவாலியிலும் நடந்தது. அங்கும் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டார்கள்.

இந்த நிலைமைதான் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கின்றது. இந்தக் கொலைகள் இனப்படுகொலைக்கு மிக ஆதாரமான ஒரு விடயமாக இருந்தாலும் அதை இனப்படுகொலை இல்லை என்று நிரூபிக்க முற்படுகின்றார்கள். இந்தக் கொலைகள் சம்பந்தமாக இனியாவது ஒரு சர்வதேச நீதி கிடைக்கப்பெறவேண்டும்.

படுகொலைகள் இடம்பெற்று எத்தனையோ ஆண்டுகள் கடந்துவிட்டன. மீண்டும் விசாரணை வரும் என்றவாறு பேசப்படுகின்றது. ஆனால், இவை எல்லாம் எங்களைப் பொறுத்தவரில் இந்த நாட்டில் சிங்களப் பெரும்பான்மையினருடன் எதுவும் செய்ய முடியாது. இதை துல்லியமாக கணித்தவர் வேலுப்பிள்ளையின் மகன். இன்று மீண்டும் அந்த நிலைமைக்கு கொண்டுவர எத்தனிக்கின்றார்கள்.

மீண்டும் இவ்வாறான அநீதிகள் இடம்பெறாதென ஜனாதிபதியால் உத்தரவாதம் கொடுக்க முடியாது. எதுவும் நடக்கலாம். ஜனாதிபதி கூட ஒரு முடிவும் எடுக்க முடியாமல் திணறுகின்றார்.

இங்கே எமது பத்திரிகை ஸ்தாபனத்தில் உள்ளே நுழைந்துகூடச் கட்டார்கள். அதற்கும் எதுவித நீதியும் இல்லை. அதன்போது இருவர் இறந் தார்கள், 16 பேர் காயமடைந்தார்கள். இங்கு தமிழனுக்கு எது நடந்தாலும் சர்வதேச சமூகமும் கவனத்தில் கொள்ளுதில்லை, அண்டை நாடான இந்தியாவும் கேட்கவில்லை. இலங்கை அரசாங் கமும் அதை செயற்படுத்தத் தயாராக இல்லை. இது அவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக ஒடிக்கொண்டு இருக்கின்றது. படுகொலை செய்யப்பட்டவர்களின் ஆத்மா சாந்தியடைய நாம் எல்லோரும் பிரார்த்திப்பதைத் தவிர வேறு வழி எங்களுக்கு இல்லை'' – என்றார்.

செஞ்சோலை நினைவேந்தல் யாழில்

யாழ். நூலகத்துக்கு முன்னால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர்.....

யாழ். மாநகர அலுவலகத்தில் மணிவண்ணன் அணியினர்

முன்னாள் இராணுவச் சிப்பாய் தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு

பு.கஜிந்தன்

போதைப் பழக்கத்துக்கு ஆளான முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் தவறான முடிவெடுத்து நேற்று முன்தினம் உயிரை மாய்த்துள்ளார்.

இவர் கடந்த காலத்தில் இராணுவத்தில் பணிபுரிந்து வந்த நிலையில், போதைப் பழக்கத்திற்கு ஆளாகி இருந்ததால் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டார். பின்னர் கந்தக்காடு புனர்வாழ்வு மையத்திலும் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில், நேற்று அவரது வீட்டுக்கு முன்னால் உள்ள மரம் ஒன்றில் தூக்கிட்டு உயிரை மாய்த்துள்ளார்.

அண்ணமார்கோவில், புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த ஈஸ்வரன் சத்தியசீலன் (வயது 29) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் நீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். பிரேத பரிசோதனைகளின் பின்னர் அவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

குளவிக்கொட்டுக்கு இலக்கான முதியவர் உயிரிழப்பு

பு.கஜிந்தன்

குளவிக்கொட்டுக்கு இலக்கான முதியவர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை (13) உயிரிழந்துள்ளார். இது குறித்து மேலும் தெரியவருகையில்,

நவாலி வடக்கு, மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த நடராசா சந்திரமோகன் (வயது 70) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த முதியவர் காணியொன்றை துப்புரவு செய்துகொண்டிருந்தவேளை குளவிக்கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் நீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். பிரேத பரிசோதனைகளின் பின்னர் அவரது சடலமானது நேற்று முன்தினம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

மஹியங்கனை வீடொன்றிலிருந்து பெண்ணொருவரின் சடலம் மீட்பு

ராமு தனராஜா

மஹியங்கனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 18ஆவது கொலனி மஹியங்கனை பகுதி வீடொன்றிலிருந்து பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பாடசாலையிலிருந்து பிள்ளையைக் கூட்டிச் செல்வதற்கு குறித்த பெண் வரவில்லை என்று பெண்ணின் கணவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கணவர் குறித்த பகுதியில் உள்ள நபரொருவருக்கு தொலைபேசி மூலம் தனது மனைவி வீட்டில் உள்ளாரா என கற்று பார்க்குமாறு கூறியுள்ளார்.

குறித்த நபர் வீட்டுக்குச் சென்று பார்க்கும்போது பெண் இரத்த வெள்ளத்தில் கீழே விழுந்து கிடந்துள்ளார். பின்னர் குறித்த நபரால் 118 அவசர பொலிஸ் இலக்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு விரைந்த மஹியங்கனை பொலிஸார் சடலத்தைப் பார்வையிட்டதுடன், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்

ராமு தனராஜா

டெமேரியா A தோட்டத் தொழிலாளர்கள் நேற்று முன்தினமும் நேற்றும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பதுளை - பறை டெமேரியா A தோட்டத்திலுள்ள 4 பிரிவுகளைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்களே இவ்வாறு வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

டெமேரியா A தோட்டத்தில் இதுவரையில் இயங்கி வந்த தோட்டக் காரியாலயத்தை டெமேரியா B தோட்டத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை தோட்ட நிர்வாகம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்த தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இது சம்பந்தமாக அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், உடன் இதற்கான உரிய தீர்வைப் பெற்றுத் தருமாறு அனைத்து தொழிற்சாலைகளிடமும் தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதுவரை காலமாக இங்கு டெமேரியா A தோட்டத்தில் இயங்கிவந்த தோட்டக் காரியாலயத்தை டெமேரியா B தோட்டத்திற்கு மாற்றினால் தாங்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்ள பல மைல் தூரம் செல்லவேண்டி ஏற்படுமெனவும் இதனால் தாங்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கவேண்டி வரும் எனவும் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

மட்டுக்கலை தோட்ட தற்காலிக குடியிருப்பில் திடீர் தீ விபத்து

டி.சந்ரு செ.திவாகரன்

லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டுக்கலை தோட்டத்தில் நேற்று முன்தினம் (14) காலை ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட வீடொன்று முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இந்தத் தீ விபத்தின்போது தெய்வாதீனமாக உயிர்ச் சேதங்கள் மற்றும் தீக்காயங்கள் எதும் ஏற்படவில்லை என்பதோடு பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், உடுதுணிகள் மற்றும் பாடப் புத்தகங்கள் என்பன தீக்கிரையாகியுள்ளன.

குறித்த வீட்டில் எரிவாயு கசிவு காரணமாகவே தீ விபத்து ஏற்பட்டதாக வீட்டு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இரத்தினக்கல் வியாபாரி வீட்டில் பணம் – மாணிக்கக்கல் களவாடல்

ராமு தனராஜா

ஒக்கம்பிட்டிய பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை மாணிக்கக் கல் வியாபாரி ஒருவரின் வீட்டிற்குள் நுழைந்து 10 இலட்சம் ரூபா பெறுமதியான மாணிக்கக் கற்களையும் 5,000 ரூபா பணத்தையும் களவாடிய குற்றச்சாட்டில் இரு சந்தேக நபர்களை ஒக்கம்பிட்டிய பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இரண்டு சந்தேகநபர்களில் ஒருவர் களவாடிய குற்றத்துக்காகவும் ஏனையவர் களவுக்கு உதவிய குற்றத்துக்காகவும் கைதுசெய்யப் பட்டுள்ளனர். அவர்கள் காவத்த மற்றும் ஒக்கம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 31 மற்றும் 35 வயதுடையவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை குறித்த வீட்டின் ஜன்னலை உடைத்து வீட்டுக்குள் புகுந்து இவற்றைத் திருடியதாகத் தெரிவிக்கப்படுகிறது. சந்தேகநபர்கள் இருவரும் வெல்வாய நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப் படுத்தப்படவுள்ளதாக ஒக்கம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை ஒக்கம்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சிறப்புக் கலாநிதிப் பட்டம் பெற்றவர் புள்ளிவிபரவியல் ஆய்வாளராக பணியேற்பு



மாத்தளையைச் சேர்ந்த முஹம்மது அப்ராஜ் 2017-2018களில் பேராதனை மற்றும் களனி பல்கலைக்கழகங்களில் புள்ளிவிபரவியல் (Statistics) விரிவுரையாளராகக் கடமையாற்றிய நிலையில், அவுஸ்திரேலியாவின் அனைப்பின்பேரில் உயர் கலவிக்கான புலமைப்பரிசில் பெற்றுச்சென்று அந்நாட்டின் குயின்ஸ்லாந்து தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியைப் பூர்த்திசெய்து அத்துறையில் கடந்த ஜூலை மாதம் "சிறப்புக் கலாநிதி பட்டம்" ((Phd in Statistics) பெற்று தற்போது பேர்த் நகர் கர்டின் பல்கலைக்கழகத்தில் புள்ளிவிபரவியல் ஆய்வாளராக(Research Statistician) பணியாற்றிவருகிறார்.

இவர் 2011 இல் மாத்தளை சாஹிரா கல்லூரியில் கணிதப் பிரிவில் உயர்தரம் கற்று பின்னர் பேராதனை பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் புள்ளிவிபரவியல் (Statistic) துறையைத் தெரிவுசெய்து கற்று முதல் தரத்தில் சித்தியடைந்து விஞ்ஞான பட்டதாரியானார்.

தனது முப்பது வயதில் கலாநிதி பட்டம் பெற்று மாத்தளைக்கும் தனது பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ள இவர், அண்மையில் இலங்கை வந்து முன்னாள் அதிபரும் கல்விப் பணிப்பாளருமான எம்.இக்பால் உப்பட கல்வியூட்டிய ஆசிரியர்களையும், தமது பெற்றோரையும் பல்கலைக்கழக மாணவர்களையும் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குடிநீர் பெற்றுத் தருவதாக பணம் வசூலித்துவிட்டு இன்னும் அதற்கான ஏற்பாடு அறவே இல்லை

ஏ.ஏ.எம்.பாயில்

குடிநீர் பெற்றுத் தருவதாகக் கூறி 2020ஆம் ஆண்டு ஒரு சமூக சேவை அமைப்பினால் நிதி சேகரிக்கப்பட்டு 4 வருடங்களாகியும் இதுவரை குடிநீர் பெற்றுத் தரப்படவுமில்லை – அதற்கான எதுவித முயற்சியும் அறவே இல்லை என பலர்கொடை விக்கிலிய உட்பட எட்டு கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மேற்படி கிராமங்கள் 8ஐயும் சேர்ந்த 2000க்கும் அதிகமான மக்கள் தாம் குடிநீர்மறி அனுபவித்துவரும் கஷ்டங்கள் காரணமாக மேற்படி குடிநீர்த்திட்டத்தை ஆரம்பிக்க முன்வந்த நிறுவனத்திற்கு ஒவ்வொரு குடும்பமும் தலா 5,500 ரூபா பணத்தை வழங்கியது. ஆனால், இதுவரை நீர் வசதி கிடைக்காமல் தாம் பெரும் நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நிதி சேகரிக்கப்பட்ட பின் பிரதேசத்தில் நீரை சேகரிப்பதற்கென இரண்டு தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனைத் தவிர வேறு எந்த ஏற்பாடும் இங்கு மேற்கொள்ளப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டு ஏங்கித்தவிக்கும் தமக்கு மிக விரைவாக - துரிதமாக இத்திட்டத்தை செயற்படுத்தித் தருமாறு இம்மக்கள் வினயமாக வேண்டுகின்றனர்.

கோலாகலமாக கொண்டாடப்பட்டது இந்தியாவின் 77ஆவது சுதந்திர தினம்

உச்சகட்ட பாதுகாப்புடன் செங்கோட்டையில் ஏறியது மூவர்ணக் கொடி

இந்தியாவின் 77ஆவது சுதந்திர தினம் நேற்று (15) நாடுமுழுவதும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு டில்லி செங்கோட்டையில் வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கடந்த ஜூலை 26 முதல் செங்கோட்டை வளாகம் எஸ்பிஜி பாதுகாப்புப் படையின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டது. அங்கு 10,000இற்கும் மேற்பட்ட பாதுகாப்புப் படை வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

பிரதமர் மோடி காலை 7.30 மணியளவில் செங்கோட்டையில் தேசிய கொடியை ஏற்றி, நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். இவ்விழாவில் பிரதமர், மூத்த அமைச்சர்கள், முக்கிய பிரமுகங்கள் பலர் கலந்துகொண்டிருந்தனர். விழாவில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 1,800 சிறப்பு விருந்தினர்களும் பங்கேற்றிருந்தனர்.

கடந்த 2014இல் பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி அமைத்தது. அதன்பின்னர் நடைபெற்ற 2019 தேர்தலிலும் பா.ஜ.க வெற்றிபெற்றது. அந்தவகையில் சுதந்திர தினத்தன்று 10ஆவது முறையாக செங்கோட்டையில் கொடி ஏற்றினார் பிரதமர் மோடி. தொடர்ந்து ஹெலிகொப்டர் மூலம் தேசிய கொடிக்கு மலர் தூவப்பட்டது. நாட்டின் சுதந்திரத்துக்காக இன்னுயிரை துறந்தவர்களுக்கு மரியாதை செலுத்துவதாக பிரதமர் மோடி தனது உரையில் குறிப்பிட்டு பேசியிருந்தார்.

மன்மோகன் சிங் சாதனையை சமன் செய்த மோடி

நாட்டின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு சுதந்திர தினத்தை முன்னிட்டு 17 முறை தொடர்ச்சியாக செங்கோட்டையில் தேசிய கொடியேற்றி இருக்கிறார். நேருவின் மகள் இந்திரா காந்தி 16 முறையும் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் தொடர்ச்சியாக 10 முறையும் தேசிய கொடியை ஏற்றி இருக்கின்றனர். தற்போதைய பிரதமர் நரேந்திர மோடி தொடர்ச்சியாக 10ஆவது முறையாக நேற்று தேசிய கொடி ஏற்றினார். இதன்மூலம் மன்மோகன் சிங்கின் சாதனையை அவர் சமன் செய்துள்ளார்.

இந்நிலையில், செங்கோட்டை தேசிய கொடி வைத்து மோடி நாட்டு மக்களுக்கு உரையாற்றுகையில்,

நாட்டின் குடிமக்கள் 140 கோடி பேரும் எமது குடும்பம்.

மணிப்பூர் மாநிலத்துடன் நாடு ஒன்றுபட்டு நிற்கின்றது. மணிப்பூரில் அமைதி நீடிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

கொவிட் -19இற்குப் பின் உலகத்தை இந்தியா வழிநடத்தி வருகின்றது.

பெருந்தொற்று காலத்துக்குப் பின் உலகின் நண்பனாக இந்தியா மாறியுள்ளது.

வளர்ச்சியை தடுத்து நிறுத்திக்கொண்டிருந்த ஊழல் என்ற தூய அரசு உறுதி பூண்டுள்ளது.

2014 மற்றும் 2019இல் நிலையான - வலிமையான அரசை மக்கள் 2 முறை அடுத்தடுத்து தெரிவு செய்ததால், சீர்திருத்தங்கள் கொண்டு வர முடிந்தது.

2 கோடி பெண்களை இலட்சாதிபதிகளாக்குவதே எமது கனவு. நாம் அளித்துள்ள வாக்குறுதிகள் எந்தளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை அடுத்த ஆண்டு செங்கோட்டையில் கொடியேற்றிவிட்டு பேசும்போது பட்டியலிட இருக்கின்றேம் எனக் குறிப்பிட்டார்.

சென்னை கோட்டை கொத்தளத்தில் தேசிய கொடி ஏற்றிய ஸ்டாலின்

இந்தியாவின் 77ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை கோட்டை கொத்தலத்தில் தேசிய கொடி ஏற்றிவைத்தார்.

அத்தோடு சென்னை செயின்ட் ஜோர்ஜ் கோட்டைக்கு வந்த முதலமைச்சர் ஸ்டாலின், பொலிஸ் துறையின் சிறப்பு அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டார். பின்னர் தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

உலக செய்திகள்

துப்பாக்கிச்சூடு நடத்தி சுதந்திர தினக் கொண்டாட்டம் பாகிஸ்தானில் 2 பேர் உயிரிழப்பு; 85 பேர் காயம்

பாகிஸ்தானில் துப்பாக்கிச்சூடு நடத்தி சிலர் சுதந்திர தினம் கொண்டாடியபோது, பொதுமக்களில் இருவர் கொல்லப்பட்டனர் எனவும் 85 பேர் காயமடைந்ததாகவும் அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் (14) 77ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. பாகிஸ்தானின் தெற்கு துறைமுக நகரமான கராச்சியில் வசிக்கும் சிலர், சுதந்திர தினத்தைக் கொண்டாடும் வகையில் வானவேடிக்கை சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தினர். அப்போது அப்பகுதியைச் சேர்ந்த சிலரது மீது துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தன.

இந்த துப்பாக்கிச்சூட்டில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதுடன் 85 பேர் காயமடைந்துள்ளனர்.

நைஜீரிய இராணுவம் போராளிகளுக்கிடையே மோதல்

26 பேர் பலி: விபத்தில் சிக்கியது மீட்பு ஹெலிகொப்டர்

நைஜீரியாவின் அம்புல் பகுதியில் இராணுவத்தினருக்கும், போராளிகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச்சூட்டில் மூன்று இராணுவ அதிகாரிகள் உட்பட 23 வீரர்கள், மூன்று பொதுமக்கள் உட்பட 26 பேர் உயிரிழந்த நிலையில் காயமடைந்தனர். எட்டு பேர் காயமடைந்தனர்.

இந்நிலையில், துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்பதற்காக நைஜீரிய விமானப் படையின் ஹெலிகொப்டரொன்று சென்றது. அந்த ஹெலிகொப்டரில், மோதலில் உயிரிழந்த 11 பேரின் சடலங்கள், காயமடைந்த 7 பேர் அழைத்துச் செல்லப்பட்டனர். ஆனால், அந்த ஹெலிகொப்டரும் விபத்தில் சிக்கியது.

3 நாட்களில் ரூ.390 கோடி வசூல் சாதனைபடைத்த 'ஜெயிலர்'

தமிழில் நெல்சன் இயக்கத்தில் ரஜினிகாந்த், மோகன்லால், ஷிவ ராஜ்குமார் நடிப்பில் உருவாகியுள்ள 'ஜெயிலர்' திரைப்படம் மூன்று நாட்களில் இந்திய அளவில் ரூ.390 கோடிக்கும் (இந்திய ரூபாப்படி) அதிகமாக வசூலித்துள்ளதாக இந்திய தயாரிப்பாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. இந்திய சினிமா வரலாற்றில் 100 ஆண்டுகால வசூல் சாதனையை முறியடித்துள்ளது.

மேல்மாகாண அபிவிருத்தித் திட்டத்தில் பேலியகொடவையும் உள்ளடக்கவும்

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்குப் பணிப்பு

பேலியகொடை நகர அபிவிருத்தித் திட்டத்தை மேல்மாகாண அபிவிருத்தித் திட்டத்துக்குள் உள்ளீர்த்து அறிக்கை தயாரிக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நகர அபிவிருத்தி அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார்.

எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் உரிய அபிவிருத்தித் திட்ட அறிக்கையை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

பத்தரமுல்லை, செத்சிறிபாயவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபை கேட்போர் கூடத்தில் நேற்று (15) இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பேலியகொடை, களனி கங்கையின் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளதால் தொடர்ந்து வெள்ள அபாயத்தை எதிர்நோக்கி வருகிறது.

பேலியகொடை நகரை நவீன நகரமாக மாற்றி மக்கள் எதிர்நோக்கும் வெள்ள அச்சுறுத்தலுக்கு தீர்வு காணப்படுவதுடன் மக்களின் வீட்டுப் பிரச்சினைக்கும் உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும்.

இதன்படி பேலியகொட நகரில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகளில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட வேண்டும். அரச மற்றும் தனியார் துறைகளின் கூட்டுத் திட்டமாக இதனை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறும் அதிகாரிகளுக்கு இதன்போது அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும் பேலியகொடை மெனிங் சந்தைக்கு அருகில் பல உணவகங்களை அமைப்பதற்காக இலங்கை காணி மீட்பு கூட்டுத்தாபனம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான இரண்டு காணிகளை பேலியகொட நகர சபை அடையாளம் கண்டுள்ளது. இது தொடர்பில் அந்த நிறுவனங்களுடன் கலந்துரையாடி மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், பேலியகொட மெனிங் சந்தைக்கு அருகாமையில் அமைந்துள்ள அனுமதியற்ற கடைகளை முறையாக நடத்துவதற்கு பொருத்தமான காணியை ஒதுக்கீடுசெய்ய வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க களனி ரஜமஹா விகாரைக்குச் சொந்தமான புனித பூமியின் அபிவிருத்தி தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென தெரிவித்த அமைச்சர், அதற்கான பொருத்தமான திட்ட அறிக்கையை தயாரிக்குமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு பணிப்புரை விடுத்தார்.

அந்த வேலைத்திட்டங்களைத் தயாரிப்பதில் களனி ரஜமஹா விகாரையின் பேராசிரியர் கொள்ளுப்பிட்டி மகிந்த சங்கரக்கித நாயக்க தேரரின் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற வேண்டியது மிகவும் அவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர்களான சிரிர ஜயகொடி, பிரசன்ன ரணவீர, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ்.சத்யானந்த, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் நிமேஷ் ஹேரத், இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹிரான் பாலசூரிய, பேலியகொட நகர சபையின் செயலாளர் தரங்கா கம்லத் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு

விண்ணப்பம் கோருகிறது பரீட்சைகள் திணைக்களம்

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்காக ஆசிரியர்களிடமிருந்து பரீட்சைகள் திணைக்களம் விண்ணப்பம் கோரியுள்ளது.

பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்திலுாடாக www.doenets.lk அல்லது https://onlineexams.gov.lk/eic ஊடாக தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பயன்படுத்தி ஒன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் செப்டெம்பர் 01ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்பு எண்கள்: 1911, 0112 785 231, 0112 785 216 அல்லது 0112 784 037 ஆகிய எண்கள் மூலம் ஏதேனும் விசாரணைகள் செய்யலாம்.

நிதி மோசடி தொடர்பில் முறைப்பாடு செய்த ஆசிரியை மீது அசிட் வீச்சு

தலாத்துஓயா பிரதேச செயலகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் பொதுச் சேவை ஆணைக்குழு மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரிடம் முறைப்பாடு செய்த ஓய்வுபெற்ற ஆசிரியை ஒருவர் மீது அசிட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட ஓய்வுபெற்ற ஆசிரியை பொலிஸ் மா அதிபர் மற்றும் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தலைக்கவசத்தால் முகத்தை மறைத்த நபர் ஒருவர் மோட்டார்சைக்கிளில் தனது வீட்டுக்கு வந்து அசிட் வீசி தாக்குதல் நடத்தியதாகக் கூறும் பாதிக்கப்பட்ட ஆசிரியை இது தொடர்பில் பொலிஸ் அத்தியட்சகரிடம் ஏற்கனவே முறைப்பாடு செய்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணம், வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய தீர்த்தோற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

நாணய மாற்று விதம் (15.08.2023)

நாணயம்	கொள்வனவு விதம்	விற்பனை விதம்
அவுஸ்திரேலியன் டொலர்	202.8321	214.5601
கனேடியன் டொலர்	232.3936	245.0999
சீன யுவான் (ரென்மின்பி)	42.5138	45.5948
யூரோ	342.2456	359.2925
ஜப்பான் யென்	2.1524	2.2632
சிங்கப்பூர் டொலர்	230.6745	243.0834
ஸ்ரேலிங் பவுன்	398.2839	417.0703
சுவிஸ் பிரான்ங்	355.6131	376.3249
ஐ.அ. டொலர்	314.7214	328.0221

நாடு	நாணயம்	விற்பனை விதம்
பஹ்ரைன்	பஹ்ரைன் தினார்	851.3246
குவைட்	குவைட் தினார்	1043.1196
ஓமான்	ஓமான் றியால்	833.6340
கட்டார்	கட்டார் றியால்	88.1089
சவூதி அரேபியா	சவூதி அரேபிய றியால்	85.5489
ஐக்கிய அரபு இராச்சியம்	ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம்	87.3796

ஞாயிறு தினங்களில் பிரத்தியேக வகுப்பு நடத்துவதை தடை செய்க!

பெற்றோர், மாணவர்கள் இணைந்து மகஜர் கையளிப்பு

வாழைச்சேனை செய்தியாளர்

வாழைச்சேனை கோறளைப்பற்று வேல்ட் விஷன் ஏற்பாட்டில் சிறுவர் கழக impact plus நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக வாராந்த ஞாயிறு தினங்களில் பிரத்தியேக வகுப்புகள் நடத்துவதை தடை செய்யுமாறு கோரி வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 200 சிறுவர்கள் மற்றும் பெற்றோர்களால் கையொப்பம் இடப்பட்ட மகஜர் கையளிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (14) இடம்பெற்றது.

கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.அனந்தருபன், கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலாளர் திருமதி தயாநந்தி திருச்செல்வம், பிரதேச செயலக உதவிச் செயலாளர் திருமதி அமலினி, உள்ளூராட்சி உதவியாளர் எஸ்.வசந்தராஜா ஆகியோரிடம் மனு கையளிக்கப்பட்டது.

குறித்த மகஜர் வழங்கவின்போது வாழைச்சேனை வேல்ட் விஷன் முகாமையாளர் அந்தோனிப்பிள்ளை ரவீந்திரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கரோலினா றாகல் மற்றும் தொழில்முறை உளவியல் ஆலோசனை மையம் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் மரியதாசன் குலசேதாசன் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

"ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் வகுப்புகளுக்கு தடை கோரி மனு கோரல்" எனும் தலைப்பிலமைந்த குறித்த மகஜரில், வாழைச்சேனை பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் மற்றும் பொது வகுப்புகள் நடைபெறுவது வழக்கம். ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் வகுப்புகளுக்கு தடை விதிக்குமாறு குறிப்பிட்ட தரப்பினருக்கு அறிவித்திருந்தோம். காரணம், ஞாயிறு தினங்களில் மறைக்கல்வி வகுப்பு, அறநெறி வகுப்பு மற்றும் சமயம் சார்ந்த செயற்பாடுகள் காலை வேளையில் நடைபெறுவதும் மற்றும் மிகுதியான நேரங்களில் அன்றைய நாளின் பொழுதை பிள்ளைகள் பெற்றோருடன் குதூகலமாக களிப்பதும் கும்பம் ஒற்றுமையை வளப்படுத்துவதற்குமாகும். எனவே, இதனைக் கருத்திற்கொண்டு மேற்கூறப்பட்ட வேண்டுகோளுக்கமைய வகுப்புகளை ஞாயிறு தினங்களில் தடைசெய்வதற்கு பெற்றோருடன் பிள்ளைகள் இணைந்து இந்த மனுவை கையளிக்கிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, மண்டூர், பலாச்சோலை கருணைமலைப்பிள்ளையார் ஆலய மஹோற்சவத்தின் ஐந்தாம் நாள் உற்சவம் அண்மையில் நடைபெற்றது. இதன்போது 1008 சங்குகள்கொண்டு சங்காபிஷேகம் இடம்பெற்றது. ஆலய பிரதம குரு சண்முகவசந்தன் குருக்கள் தலைமையில் இடம்பெற்ற கிரியை நிகழ்வுகளில் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

படங்கள்: குருக்கள்மடம் செய்தியாளர்



அக்கரைப்பற்று, பட்டியடிப்பிட்டி ஜூம்ஆ பள்ளிவாசலில் முஹர்ரம் மாதத்தை முன்னிட்டு கடந்த 15 நாட்களாக நடைபெற்ற புகாரி ஷரீப் பாராயண மற்றும் வியாக்கியான நிகழ்வின் இறுதி நாள் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (13) நடைபெற்றது. இந்நிகழ்வில் உலமாக்கள், பெரியார்கள், ஊர் ஜமாத்தார்கள் என பலர் கலந்துகொண்டனர்.

ஆரையம்பதி வீதியில் அதிகரிக்கும் விபத்து

கட்டுப்படுத்துவது குறித்து கலந்துரையாடல்

மட்டக்களப்பு செய்தியாளர்

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதி ஆரையம்பதி நெடுஞ்சாலையில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் வீதி விபத்துகளைத் தடுக்கும் நோக்குடன், விசேட ஏற்பாடுகள் மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சரும் மண்முனைப்பற்று பிரதேச அபிவிருத்திக் குழு தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் ஆலோசனைக்கமைய, மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி நமசிவாயம் சத்யானந்தி தலைமையில் செவ்வாய்க்கிழமை (15) நடைபெற்றது.

ஆரையம்பதி வைத்தியசாலை தொடக்கம் பொதுச் சந்தை வரையிலான சுமார் 150 தொடக்கம் 200 மீற்றர் இடைவெளியில் கடந்த ஒரு வருடத்துக்குள் 25க்கும் மேற்பட்ட வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. இதில் பாதையை கடக்க முற்பட்ட 06 பேர் மரணமடைந்துள்ளனர்.

இந்நிலை மிகவும் பாதுகாப்பற்றதாக மாறியுள்ள அதேவேளை, இவற்றைக் கட்டுப்படுத்தி பாதுகாப்பான பாதசாரிகள் கடவையை எவ்வாறு மேற்கொள்வது, வீதி விபத்துகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், உரிய நடவடிக்கைகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இக்கலந்துரையாடலில் மண்முனைப்பற்று பிரதேச சபை செயலாளர் சர்வேஸ்வரன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் பொதுச் செயலாளருமான பூபாலபிள்ளை பிரசாந்தன், காத்தான்குடி பொலிஸ் நிலைய துணை பொறுப்பதிகாரி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர் உள்ளிட்ட பலதுறை சார்ந்த அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

24ஆவது சிறந்த ஊடகவியல் விருதுகள் 2022

விருது பிரிவுகள் பட்டியல் (அச்சு ஊடகம்)

- ஆண்டின் மிகச் சிறந்த ஊடகவியலாளருக்கான மேர்வின் டி சில்வா விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த புலனாய்வு ஊடகவியலாளருக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த சுவாரஷியமான செய்தி வெளியீட்டுக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த இளம் ஊடகவியலாளருக்கான டெனிஸ்டீ பீரிஸ் விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச்சிறந்த சுகாதார மற்றும் மருத்துவ அறிக்கையிடலுக்கான விருது (சிங்களம் / தமிழ் /ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த சூழலியல் அறிக்கையிடலுக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த விளையாட்டுதுறை ஊடகவியலாளருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த பத்திரிகை பக்க வடிவமைப்புக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு பரிசு)
- ஆண்டின் மிகச் சிறந்த வணிகவியல் மற்றும் நிதியியல் ஊடகவியலாளருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த சுருத்துப்பட ஓவியருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த நெருக்கடியான சூழநிலைகளின் கீழ் அறிக்கையிடலுக்கான பேராசிரியர் கலகமசுத் விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிறிவர்த்தன விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- நகவல் அறியும் உரிமை சட்டத்தை பயனபடுத்தி எழுதப்பட்ட ஆண்டினதா மிகச்சிறந்த செய்தி அல்லது விவரணத்திற்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த சமூகப் பிரச்சினைகளை அறிக்கையிடலுக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த விவரண எழுத்தாளருக்கான உபாலி விதேவேர்த்தன விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

விருது பிரிவுகள் பட்டியல் (பத்திரிகை இணையத்தளங்கள்)

- மிகச் சிறந்த பத்திரிகை இணையத்தளம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- மிகச் சிறந்த காணொளி ஆக்கம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

(குமிழ்/சிங்களம்/ஆங்கிலம்) : ஒவ்வொரு மொழிப் பிரிவிலும் ஒவ்வொரு பரிசு

2022 ஆம் ஆண்டு தகவறி முதலாம் திகதிக்கும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கும் இடையில் பத்திரிகைகளாள்ரில் தமது ஆக்கங்கள். கருத்துப்பட ஓவியங்கள் மற்றும் புகைப்படங்களின் பிரசாரங்களைக் கொண்ட விண்ணப்பதாரிகள் பத்திரிகைகளிலிருந்து பெறப்பட்ட தமது மூல ஆக்கங்கள். கருத்துப்பட ஓவியங்கள் அல்லது புகைப்படங்களை ஒவ்வொரு பிரிவுக்கும் தலா 5 வீதம் சமர்ப்பிக்க அனுமதிப் விடுக்கப்பட்டுள்ளது. மூல பத்திரிகை ஆக்கங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் பத்திரிகை ஆசிரியர் அல்லது பத்திரிகை ஆசிரியர்கள் ஊக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரின் அத்தாட்சிப்படுத்தலுடன் ஆக்கத்தின் பிரதியை அனுப்ப மாற்றுவதாக்கப்பட்டுள்ளது.

சுதந்திர நடுவர் குழுவினர் வெற்றியாளர்களைத் தெரிவு செய்வர்.

விண்ணப்ப முடிவுத் திகதி: வியாழக்கிழமை, ஆகஸட் 31, 2023.

அனைத்து ஆக்கங்களும் சரியாக கோப்புருவாக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். (தளர்வாக கட்டப்பட்ட பத்திரிகை ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ஆக்கங்கள் சகிதம் விண்ணப்பங்கள் குழுத் தலைவர், சிறந்த ஊடகவியல் விருதுகள் 2022, மேற்பார்த்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், 96, பெர்னாந்து செனாலா மாவத்தை (கிருள வீதி), கொழும்பு 5 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

கிழக்கு செய்திகள்

eastthamilan@gmail.com

'நானும் குருநாதனும்' நினைவேடு வெளியீடு

மீனோடைக்கட்டு செய்தியாளர்

திருகோணமலையில் ஊடகத்துறையின் ஜாம்பவானாகத் திகழ்ந்த அமரர் சின்னையா குருநாதனின் 85ஆவது அகவை தின நிகழ்வும் அவர் நினைவேடு பற்றி எழுதப்பட்ட "நானும் குருநாதனும்" தொகுப்பு நூல் வெளியீடும் திருகோணமலை நகராட்சிமன்ற பொது நூலகக் கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை (11) இடம்பெற்றது.

அன்பின் பாதையின் எண்ணம்போல் வாழ்க்கை கலை, இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் கனக.தீபகாந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மூத்த ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

வருகை தந்திருந்த அனைவருக்கும் 'நானும் குருநாதனும்' என்ற நினைவேட்டு நூலை அமைப்பின் தலைவர் கனக.தீபகாந்தன் வழங்கிய அதேவேளை, அமரர் சின்னையா குருநாதனின் நினைவுகள் பற்றிய பல விடயங்கள் கலந்துகொண்டோரால் பேசப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

சாதனையாளர்கள் கௌரவிப்பு

மாளிகைக்காடு, பொலிவேரியன் செய்தியாளர்கள்

கழக உறுப்பினர்களுக்கான பாராட்டு, சர்வதேச அளவில் சாதனை புரிந்த சிறுமிகளுக்கான கௌரவம் வழங்கும் நிகழ்வு அண்மையில் (11) இடம் பெற்றது.

சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழகத்தால் சந்தேங்கனி மைதானத்தில் வைத்து பெறப்பட்ட பெல்ட் XI ரி10 சம்பியன் மற்றும் KSC ரி10 இரண்டாம் நிலை வெற்றிக் கிண்ணங்களைப் பெற்ற சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழக வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இளம் வீரர்கள் மற்றும் கழகத்துக்கு இடையிலான ஒற்றுமையை வலுப்படுத்தல் வேலைத்திட்டமும் கழக முகாமையாளர் எம்.எம். பஸ்மீரின் நெறிப்படுத்தலில் கழகத் தலைவர் எம்.பி.எம்.பாஜில் தலைமையில் சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக பிரதித் தலைவரான சாய்ந்தமருது வீடீர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலய பிரதி அதிபராக இருந்து அண்மையில் ஓய்வுபெற்ற ஏ.எம்.ஏ.நிஸார், கழகத்தின் ஊடக செயலாளர் நூருல் ஹுதா உமர், சாய்ந்தமருது சமூக சேவையாளர் - விவாகப் பதிவாளர் எம்.ஐ.உதுமாலெப்பை ஆகியோர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். மேலும் ஆசிய சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த மற்றும் சர்வதேச அளவில் சாதனை புரிந்த சிறுமிகளுக்கான கௌரவமும் இடம்பெற்றது.

இதன்போது சாய்ந்தமருது பொதுநிறுவனங்கள் சம்மேளனத் தலைவர் ஏ.எல்.எம்.பரீட், தொழில் திபர் யூ.எல்.சப்ரி, கழக செயளாளர் ஏ.சி.எம்.நிஸார், கழக நிர்வாகிகள், கழக வீரர்கள், சாதனை சிறுமிகளின் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இலைக்கஞ்சி அறிமுகம்

நற்பிட்டிமுனை, அட்டப்பள்ளம், மருதமுனை மேலதிக செய்தியாளர்கள்

புதிய கல்விச் சீர்திருத்த விதப்புரையின்கீழ் தரம் 04 கற்றாடல் பாடத்தின் எடுதுஉணவு அவகிள் "தரமானதும் மருத்துவத்தன்மை கொண்டதுமான பான வகைகளை நுகரப் பழகுவார்" எனும் தோச்சியினூடாக "இலைக்கஞ்சியை" மாணவர்களுக்கு அறிமுகம்செய்யும் நிகழ்வு கல்முனை இஸ்லாமாபாத் வித்தியாலய அதிபர் ஏ.ஜி.எம்.றிஷாட் தலைமையில் திங்கட்கிழமை (14) இடம்பெற்றது.

ஆரம்பக்கல்வி பகுதித்தலைவர் டீ.கே.எம்.மெளசீன் ஆசிரியரையுடன் இடம்பெற்ற இச்செய்யாட்டில் தரம் 04 வகுப்பாசிரியை செல்வி எஸ்.றுஸ்தா பர்வின் சிறாஜுதீன் வழிகாட்டலின்கீழ் "இஸ்லாமாபாத்தின் இலைக்கஞ்சி இல்மெ-2023" எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் விசேட அதிதியாகக் கலந்துகொண்ட முகாமைத்துவத்துக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எம்.எச்.றியாஸா, அதிபர் ஏ.ஜீ.ஏ.றிசாத் உப்பட ஆசிரியர்கள், பகுதித் தலைவர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கிண்ணியா அலிகார் மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறுவர் கண்காட்சியும் சிறுவர் சந்தையும் திங்கட்கிழமை (14) நடைபெற்றன. பாடசாலை அதிபர் எம்.எஸ்.அகமட் ராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கல்வியியலாளர் கலாநிதி ஏ.எஸ்.மஹரூப் விருந்தினராக கலந்துகொண்டிருந்தார்.

படங்கள்: சீனக்குடா செய்தியாளர்

ஒற்றுமையை உளரீதியாக காட்டவேண்டியது அவசியம்

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் அமைப்பாளர் தெரிவிப்பு

அப்துல்சலாம் யாசிம்

திருகோணமலை மண்ணில் கடந்த சில நாட்களாக நடந்தேறிய விடயங்களை யாவரும் அறிந்திருப்பீர்கள். இன நல்லிணக்கம் என பேசிக் கொண்டு இவ்வாறான செயற்பாடுகளை அரங்கேறவிடுவது பொருத்தமற்ற செயலாகும். ஒற்றுமை என்பது வாயளவில் சொல்லிக்கொண்டிருக்கின்ற விடயம் அல்ல. செயல்முறையில் உளரீதியாக காட்டப்பட வேண்டியதாகும் - என ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் அமைப்பாளர் அகத்தியர் அடிகளார் தெரிவித்தார்.

ஈழத்திருநாட்டில் தற்போது நடந்து கொண்டிருக்கும் அரசியல் சூழ்நிலைகள், சமயத்தின் நிலைமைகள் பற்றி யாவரும் அறிந்திருப்பீர்கள். இறுதியையில், புலம்பெயர் சமூதாயம் உண்மையான நிலையைப் புரிந்து கொண்டு தங்களுடைய ஆதரவுகளை வழங்க முன்வர வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால், நடைமுறையில் பெரும்பான்மை யினரின் செயற்பாடுகள் அதற்கு மாறுதலாகவே காணப்படுகின்றன. தமிழர்களை வெட்டி களனி கங்கையில் தலைகளை எறிவேன் என்று வசனம் பண்பாடான ஓர் அரசியல்வாதி பேசக்கூடிய வசனமல்ல. பாராளுமன்ற அரங்கில் மக்கள் பிரதிநிதி பேசவது, சமய பிரதிநிதிகள் இவ்வாறான விடயங்களைக் கையாள்வது மானுட பண்புக்குப் பொருத்தமானதாகத் தெரியவில்லை.

தமிழர்கள் எல்லோரும் பாகுபாடின்றி ஒன்றுபட வேண்டும் என்பதே என்னுடைய அவா. எங்களுடைய இருப்பை பாதுகாத்துக் கொள்வதற்காக தமிழர்கள் எங்களுடைய நிலைமைகளை சிந்திக்க வேண்டிய தேவை இருக்கிறது. சிந்தித்து செயல்படுவதற்காக அரசியல் தலைவர்கள், பல்கலைக்கழக பெரியோர் கள், மானவர்கள் சமூகத்தை நேசிக்கின்ற அக்கறை உள்ள புத்திஜீவிகள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து நாங்கள் என்ன செய்யலாம், எப்படி எங்களுக்கான இருப்பை தக்க வைத்துக்கொள்ளலாம் என்பதை சிந்தித்து செயல்படுவதற்கு நாம் அனைவரும் ஒன்று சேர வேண்டும் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹரிஸின் முயற்சியால் கல்முனை டாக்டர் றிஸ்வி வீதி (பிச்சிப்பிலாவடி வீதி) புனரமைப்பு வேலைத்திட்டம் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இவ்வீதி புனரமைப்பு விடயத்தில் ஏற்பட்ட தடங்கல் மற்றும் தாமதங்கள் தொடர்பாக ஹரிஸ் எம்.பியை அவ்வீதியில் வசிக்கும் பிரதேச மக்கள் சந்தித்து கலந்துரையாடினர். வீதி புனரமைப்பு விடயத்தில் ஏற்பட்ட தாமதம் தொடர்பில் மக்களால் எடுத்துக் கூறப்பட்டதையடுத்து, உடனடியாக சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் ஹரிஸ் எம்.பி. தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு காலதாமதமின்றி புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்குமாறு பணிப்புரை வழங்கியிருந்தார்.

படப்பிடிப்பு: நாவிதன்வெளி, மாளிகைக்காடு செய்தியாளர்கள்

வீதிகளுக்கு பெயர்ப்பலகையிடுமாறு கோரிக்கை

சாய்ந்தமருது செய்தியாளர்

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட அனைத்து வீதிகளுக்கும் குறுக்குத் தெருக்களுக்கும் பெயர்ப்பலகைகளை அமைக்குமாறு சாய்ந்தமருது கல்வி, சமூக, கலாசார அபிவிருத்தி மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

கல்முனை மாநகர சபை பிரதேசங்களில் நீண்ட காலங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டிருந்த வீதிப் பெயர்ப்பலகைகள் தேய்மடைந்தும் அழிவடைந்தும் காணப்படுவதுடன், சில வீதிகளின் பெயர்ப்பலகைகள் இருந்த இடமும் இல்லாமல் போயுள்ளன.

இதனைக் கருத்திற்கொண்டு சில மாதங்களுக்கு முன்னர் இப்பிரதேசங்களிலுள்ள வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்குச் சொந்தமான சில பெரிய வீதிகளுக்கு மாத்திரம் பெயர்ப்பலகைகள் இடப்பட்டுள்ளன. எனினும், மாநகர சபைக்கு சொந்தமான வீதிகளுக்கு இன்னும் பெயர்ப்பலகைகள் அமைக்கப்படவில்லை.

பெரும்பாலான வீதிகளுக்கு பெயர்ப்பலகை இல்லாததன் காரணமாக வெளியிடங்களிலிருந்து வருகை தருகின்ற பயணிகள் மாத்திரமல்லாமல், உள்ளூர் மக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். பொதுமக்கள் தமது வசிப்பிடத்தை அடையாளப்படுத்துவதற்கு வீதியின் பெயரையே குறிப்பிட்டுக் கூறுவர். ஆனால், ஏனையோர் அதனை புரிந்துகொள்வதற்கு, குறித்த வீதியின் பெயரை அறிந்திருக்க வேண்டும். அதனை அவ்வீதியின் பெயர்ப்பலகையைக்கொண்டே அவர்களால் அறிந்துகொள்ள முடியும்.

ஆகையால், இனியும் காலம் தாமதிக்காமல் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட அனைத்து வீதிகளுக்கும் ஒழுங்கைகளுக்கும் பெயர்ப் பலகைகளை இடுவதற்கு அவசர நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளது.

கோரளைப்பற்று பிரதேசத்துக்கான அபிவிருத்தி கலந்துரையாடல்

வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்

''கிழக்கு மாகாணத்தின் ஜனநாயக பங்குதாரர்களுக்கான ஓர் இடம்'' என்ற தொனிப்பொருளில் ஏ.எச்.ஆர்.சி. எனும் அரச சார்பற்ற நிறுவனத் தால் பிரதேசத்தின் அபிவிருத்திக்கான கலந்துரையாடல் கோறளைப்பற்று பிரதேச சபை மண்டபத்தில் அன்மையில் நடைபெற்றது.

பிரதேசத்தின் அபிவிருத்திக்காக உள்ளூர் ஊடகவியலாளர்கள், சிவில் சமூக அமைப்புகள், உள்ளூராட்சி சபை பிரதிநிதிகளுக்கிடையிலான உறவை வலுப்படுத்துவதன்மூலம் உண்மைத் தன்மை மற்றும் வெளிப்பாட்டுத்தன்மையை அதிகரித்தல் என்கின்ற அடிப்படையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது பிரதேச சபையால் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்திப் பணிகள், மக்கள் சேவை தொடர்பான பணிகள் என்பன தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது அனைத்து சந்திப்புகளிலும் பங்குபற்றி உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகள் மற்றும் வெளிப்பாடுகள் சம்பந்தமாக சமூகத்துக்கு தெரிவித்தல், சந்திப்புகளில் கலந்துரையாடப்பட வேண்டிய சமூக பிரச்சினைகளையும் தேவைகளையும் அடையாளப்படுத்துதல், உள்ளூராட்சி சபைகளால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் குறித்து சமூகத்துக்கு அறியப்படுத்தல் போன்ற தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இன்றைய நிகழ்வானது, சபையால் முன்னெடுக்கப்படுகின்ற நவீன மற்றும் புத்தாக்க செயற்பாடுகளை மக்களுக்கு வெளிப்படுத்துவதற்கான களமாக அமைந்தது.

இக்கலந்துரையாடலின்போது பிரதேச சனசமூக நிலையை உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், பிரதேச சபை உயர் அதிகாரிகள், ஏ.எச்.ஆர்.சி. நிறுவன செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

சின்னமுத்து தடுப்பூசியை ஏற்றிக்கொள்க!

சுகாதார வைத்திய அதிகாரி வேண்டுகோள்

மாளிகைக்காடு செய்தியாளர்

நாட்டில் தற்போது சின்னமுத்து நோய் சிறுவர்களிடையே வேகமாகப் பரவிவருவதனாற் குழந்தை பிறந்து 09 மாதங்கள் மற்றும் 03 வயதில் போடப்படும் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்கள் உடனடியாக ஏற்றிக்கொள்ளுமாறு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே. எம்.அர்சத் காரியப்பர் பொதுமக்களை கேட்டுக்கொள்கின்றார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திங்கட்கிழமைகளில் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையிலும், செவ்வாய்க்கிழமைகளில் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திலும், புதன்கிழமைகளில் சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் அமைந்துள்ள சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திலும் குறித்த தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் சின்னமுத்து நோயிலிருந்து உங்கள் பிள்ளைகளைப் பாதுகாத்துக்கொள்ள இந்தத் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளுமாறு பொதுமக்களை அவர் வலியுறுத்தியுள்ளார்.

கிழக்கு செய்திகள்

easthamilan@gmail.com

பட்டிருப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயத்தில் டெங்கு ஒழிப்பு விசேட சிரமதானம் திங்கட்கிழமை (14) பாடசாலை அதிபர் எஸ்.சிறிதரன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு பாடசாலை வளாகத்தையும் சுற்றுப்புறச் சூழலையும் துப்புரவு செய்தனர்.

படப்பிடிப்பு: மட்டக்களப்பு, குருக்கள்மடம் செய்தியாளர்கள்

போடியார் புலம்பல்!

எல்லா நாம்பலும் ஓடுது எண்டு வகுத்து நாம்பலும் ஓடித்தாம் எண்ட கத மாதிரி எதுவா..? இப்ப உலமா கட்சி தலைவர் மௌலவி மூபாறக் அப்துல் மஜீத் இராவணன் முஸ்லிம் மன்னனாம் எண்டு புதுக்கதய அவுட்டுள்ளார்...! சரிடா நானா அப்ப ஏண்டா இராவணன் எண்ட தமிழ் பெயர அவருக்கு ஒங்கட வாப்பாவும், உம்மாவும் வைச்சவங்க "ஜனாப் இஷாகன் காஜியார்" எண்டல்வா சும்மா எண்டான பெயர் இருக்கோணும் பொய் சொல்லக்குடாப் பொருத்தமாக எதுவா சொல்லோணும்? எப்படி பொய் சொல்லலாம் எண்டத குதிரை கட்சி அதாவுல்லாட்ட ஒள்ளுப்பம் கேட்டு படிச்சுப்போட்டு இத சொல்லி இருக்கலாம் எதுவா...?

கிழக்கில் தொழிலற்றோர் வீதம் காலாண்டில் 7.2 ஆக அதிகரிப்பு

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2021ஆம் ஆண்டு 04 வீதமாக இருந்த தொழிலற்றோர் விகிதம் இந்த வருடத்தின் முதல் காலாண்டில் 7.2 ஆக அதிகரித்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் மொத்த தொழிலற்றோர் வீதம் 22ஆக உள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான திருமதி கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களம், மாவட்ட செயலக தொழில் நிலையம், அக்வுன் யுனிற்றி லங்கா ஆகியவை இணைந்து மாவட்டத்தின் மாபெரும் தொழில் கல்விச் சந்தை ஒன்றை அண்மையில் (12) மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரியில் ஏற்பாடு செய்திருந்தன.

மாவட்ட செயலாளர் கலாமதி பத்மராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சுமார் 30இற்கும் மேற்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு தொழில் வழங்கும் நிறுவனங்கள், அரச தனியார்துறை தொழிற்கல்வி நிறுவனங்கள் கலந்துகொண்டன.

இதன்போது தொழில் கல்விச் சந்தையை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய மாவட்ட செயலாளர், '' உயர்தரக் கல்வியை முடித்தவர்கள், பல்கலைக்கழகம் செல்லாத ஒரு தரப்பினர், சாதாரண தரத்தில் விடுபடுகின்ற தரப்பினர், வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பியவர்கள் இவ்வாறு பதரப்பட்டவர்கள் வேலையற்று இருக்கிறார்கள்.

அரசாங்க உத்தியோகங்களை விட தனியார் தொழில்துறைகளில் அதிக வேலைவாய்ப்புகள் நிறைந்து காணப்படுகின்றன. தனியார் தொழில் துறையின் மூலம்தான் உண்மையான பொருளாதார அபிவிருத்தியை அடைந்துகொள்ள முடியும். எனவே, பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு எல்லோரும் சிந்திக்க வேண்டும்" - என்றார்.

சுமார் 1000க்கும் மேற்பட்ட உடனடித் தொழில் வாய்ப்புகளோடு இந்நிறுவனங்கள் இந்தத் தொழிற்சந்தையில் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் மாவட்ட உதவிச் செயலாளர் ஏ. நவேல்ஸ்வரன், நிகழ்வை இணைப்பாக்கம் செய்து அனுசரணை வழங்கிய அக்வுன் யுனிற்றி லங்கா நிறுவன திட்ட முகாமையாளர் வி.சுதர்ஷன், நிகழ்சித் திட்ட இணைப்பாளர் அனுஜா அன்ரன், மாவட்ட சமூக சேவை அலுவலர் சந்திரகலா கோனேஸ்வரன், மாவட்ட மனித வலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்கள உத்தியோகத்தர்கள் உட்பட தொழில்துறை நிறுவனங்களின் பிரதிநிதிகள், தொழில் தருநர்கள், உள்நாட்டு வெளிநாட்டு தொழில் தேடுவோர், உயர்தர, பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த தொழில் சந்தை நிகழ்வு இளைஞர், யுவதிகளுக்கான சிறுவர் நிதியத்தின் நிதி அனுசரணையோடு இடம்பெற்றது.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்டம் உட்பட முழு கிழக்கு மாகாணத்திலும் தொழிலற்றோர் வீதம் அதிகரித்து வருவதாக மாவட்ட மனித வலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

காத்தான்குடியில் சுற்றிவளைப்பு: 27 பேர் மீது வழக்குத் தாக்கல்!

காத்தான்குடி மேலதிக செய்தியாளர்

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் மோட்டார் போக்குவரத்து பொலிஸாரால் திங்கட்கிழமை (14) மாலை திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது 27 பேர் கைதுசெய்யப்பட்டதுடன் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட மோட்டார் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி ஸத் சந்திர தெரிவித்தார்.

பிராந்திய சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி அஜித் ரோஹணவின் விசேட பணிப்புரையின் கீழ் பிரதி பொலிஸ்மா அதிபரின் வழிகாட்டலில் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் ஆலோசனைக்கமைய மாலை 5 மணிமுதல் இரவு 9 மணிவரை காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி, ஆரையம்பதி, நாவற்குடா, கல்லடி ஆகிய பிரதேசங்களில் இத்திடீர் சுற்றிவளைப்பை மோட்டார் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது மோட்டார் சைக்கிள்களுக்கு அனுமதிப்பத்திரம் இல்லாமை, காப்புறுதி மற்றும் தல்தா வேஜூகேள் இல்லாமை, தலைக்கவசம் அணியாத 27 பேர் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டு இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

காத்தான்குடி கடற்கரை பிரதேசத்தில் சுமார் 03 மணிநேரம் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது பல இளைஞர்கள் தலைக்கவசம் அணியாது மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்குரிய தல்தாவேஜூகேள் இன்றி மோட்டார்சைக்கிள் செலுத்தியமை கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதுடன், பலர் எச்சரிக்கையும் செய்யப்பட்டனர்.

சிங்கப்பூரில் நடைபெற்ற Loyalty & Engagement Awards 2023 விருது விழாவில் Dialog Star Points தங்க விருதை வென்றது!

டயலொக் ஆசி ஆட்டா பிஸ்சியின் Loyalty திட்டமான Star Points, சிங்கப்பூரில் நடைபெற்ற MARKETING-INTERACTIVE நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட Loyalty & Engagement விருது விழாவின்போது தொலைத்தொடர்பு பிரிவில் Loyalty Strategy எனும் தங்க விருதை வென்றது. இதன் மூலம், Dialog இன் Star Points loyalty திட்டம் சர்வதேச அளவில் ஆசியாவின் சிறந்த விசுவாசத் திட்டமாக அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ள இலங்கையின் Loyalty திட்டமாக Star Points அமைந்துள்ளமை, Star Points பயனத்தில் ஒரு தனித்துவமான மைல்கல்லைக் குறிக்கிறது. சர்வதேச அந்தஸ்தைக்கொண்ட முன்னணி தொலைத்தொடர்பு இணைப்பு வர்த்தக நாமங்களை தோற்கடித்து இந்த விருதை வென்று கௌரவிப்பை பெற்றமையானது, அதன் வாடிக்கையாளர்களுக்கு loyalty அனுபவங்களை வழங்குவதில் Star Pointsஇன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த சாதனை குறித்து, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதான செயற்பாட்டு அதிகாரி லசந்த தெவெரப்பெரும பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்.

"இந்த மதிப்பிற்குரிய தங்க விருதைப் பெறுவது, எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு மிகச்சிறந்த Loyalty அனுபவத்தை வழங்குவதில் நாம் கொண்டுள்ள அலைக்க முடியாத உறுதியான அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது. கடந்த 15 வருடங்களாக எங்களுடன் கைகோர்த்துள்ள நமது மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதார விற்பனைப் பிரதிநிதிகளுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவிப்பதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புகிறோம்."

சிங்கப்பூரில் MARKETING-INTERACTIVE மூலம் ஏற்பாடுசெய்யப்பட்ட The Loyalty & Engagement Awards விருதுகளானது தெற்காசியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் ஓசியானியா பிராந்தியங்களில் சந்தைப்படுத்தல் உத்திகள், Loyalty திட்டங்கள் மற்றும் இணைப்பு சந்தைப் படுத்தல் உத்திகளை அங்கீகரித்து வழங்கப்பட்டு வருகின்றது. இத்துறைசார் அனுபவம் வாய்ந்த சந்தைப்படுத்துனர்கள் மற்றும் கல்வியாளர்களைக் கொண்ட நடுவர் குழுவால் மேற்பார்வையிடப் பட்ட பின்னர் விருதுகளுக்குரிய திட்டங்கள் தேர்ந் தெடுக்கப்படுகின்றன.

இத்தகைய பின்னணியில் இந்த மைல்கல்லை அடைந்து வெற்றிகளைக் கொண்டாடும் இத்தருணத்தில், எம்மீது எப்போதும் நம்பிக்கை கொண்டுள்ள நமது வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதார விற்பனைப் பிரதிநிதிகளுக்கும் Dialog நாம் என்றென்றும் நன்றியுடையவர்களாக இருப்போம்.

அதற்கமைய, Dialog தனது வாடிக்கையாளர் களுக்கு தனித்துவமான Loyalty அனுபவத்தை வழங்குவதன் மூலம் இலங்கையின் மிகப் பெரிய Loyalty திட்டமாக மாறுவதற்கு உறுதி பூண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

டயலொக் Star Points பற்றிய மேலதிக விபரங் களுக்கு, www.dialog.lk ஐப் பார்வையிடவும்.

STAR POINTS
அதிக சேமிப்பு. குறைந்த செலவு.

நாட்டுக்காக விளையாடாமல் ஐ.பி.எல்லில் ஆடும் முக்கிய வீரர்கள்

ஐசிசி ரி20 போட்டி தரவரிசையில் 14,267 புள்ளிகளுடன் இந்திய அணி தற்போது முதலிடத்தில் உள்ளது.

கடந்த ஆண்டு ரி20 உலகக் கிண்ணப் போட்டியிலிருந்து இந்தியா வெளியேறியதைத் தொடர்ந்து பெரிய மாற்றங்களைச் செய்ய பிசிசிஐ முடிவு செய்ததால், பல மூத்த வீரர்கள் இந்தியாவின் ரி20 போட்டிகளில் பங்குபெற முடியாமல் போனது.

2023இல் இதுவரை இந்தியாவுக்காக ஒரு ரி20 போட்டியில் கூட விளையாடாத ஐந்து வீரர்களைப் பார்க்கலாம்.

கெப்டன் ரோஹித் ஷர்மா, 2022 ரி20 உலகக் கிண்ண அரைமிறுதிக்குப் பிறகு இந்தியாவுக்காக எந்தவொரு ரி20 போட்டியிலும் விளையாடவில்லை. விராட் கோஹ்லியும் 2023இல் இதுவரை ரி20 போட்டியில் விளையாடவில்லை.

கடந்த இரண்டு ரி20 உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடிய மூத்த ஆஃப் ஸ்பின்னர் ரவிச்சந்திரன் அஸ்வின், 2022 ரி20 உலகக் கிண்ணப் போட்டியின் பின்னர் இந்திய அணியில் இடம்பிடிக்கவில்லை.

மூத்த வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி கடந்த ஆண்டு ரி20 உலகக் கிண்ணத்துக்கான இந்திய அணியில் கடைசி நேரத்தில் சேர்க்கப்பட்டார். 2023இல், முகமது ஷமி இந்திய அணிக்காக இன்னும் ஒரு ரி20 போட்டியில் விளையாடவில்லை.

அதேபோல் இந்திய அணியின் விக்கெட் கீப்பர்களில் ஒருவரான கே.எல்.ராகுல், இந்த ஆண்டு இதுவரை ஒரு ரி20 போட்டியில் கூட விளையாடவில்லை .

இந்திய அணியின் முக்கிய மற்றும் சீனியர் வீரர்கள் இந்த ஆண்டில் இந்திய அணிக்காக ஒரு ரி20 போட்டியில் கூட விளையாடவில்லை என்றாலும், ஐசிசி தரவரிசைப் பட்டியலில் இந்திய அணி கடைசி 54 போட்டிகளில் 14 ஆயிரத்து 267 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேபோல் மேலே குறிப்பிட்ட ஐந்து வீரர்களும் இந்தியாவில் நடைபெறும் பிரம்மாண்டமான கிளப் கிரிக்கெட் தொடரான ஐபிஎல் தொடரில் விளையாடி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சவூதி அணியில் இணையும் ஸ்டார் வீரர் நெய்மர்

சவூதி கால்பந்து லீக் தொடரில் விளையாடி வரும் அல்-ஹிலால் அணியில் இரண்டு சீசன்களுக்கு ஒப்பந்தமாகியுள்ளார் பிரேஸில் வீரர் நெய்மர். பிஎஸ்ஜி என்று அழைக்கப்படும் பாரிஸ் செயின்ட் ஜேர்மைன் கிளப்புக்காக கடந்த ஆறு ஆண்டுகள் விளையாடி வந்த அவர் தற்போது அல்-ஹிலால் கிளப் அணியில் இணைவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்.

இதற்காக அவருக்கு சம்பளமாக இந்திய மதிப்பில் ரூ. 900 கோடி ஊதியம் வழங்கி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து சவூதி அரேபியா புரோ கால்பந்து லீக்கில் இரண்டு சீசன்கள் நெய்மர், அல்-நிசர் அணிக்காக விளையாடவுள்ளார்.

ஏற்கனவே, சவூதி கிளப் அணியான அல்-நாசர் என்ற அணியில் போர்த்துக்கலின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ விளையாடி வருகிறார். வரவுற்றிலேயே யாரும்கூர் வெடுக்காத பிரம்மாண்ட விலையை அளித்து அல் நாசர் நிர்வாகம் ரொனால்டோவை ஒப்பந்தம் செய்துள்ளது.

ஈரான்வில் புவழ் பெற்ற கால்பந்து லீக் போட்டிகளில் விளையாடி வரும் பல்வேறு வீரர்களும் சவூதி புரொ லீக் கிளப் அணிகளின் பணவலுக்கு மயங்கி தெரிவிப்பது வந்து, அதிரடி ஒப்பந்தமாக செய்து வருகின்றனர்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

போராடி வென்றது கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ்

கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ், பி-லவ் கண்டி அணிகளுக்கிடையே ஆர்.பிரேமதாச மைதானத்தில் நடைபெற்ற லங்கா பிரீமியர் லீக் (LPL) ரி20 தொடரின் 18ஆவது லீக் போட்டியில் கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அணி ஒன்பது ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற சாமிக்க கருணாரட்ன தலைமையிலான கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 169 ஓட்டங்கள் எடுத்தது.

பெத்தும் நிஸ்ஸங்க 38 பந்துகளில் ஒரு சிக்ஸர் மற்றும் 4 பௌண்டரிகள் அடங்கலாக 51 ஓட்டங்கள் எடுத்தார். நிபுன் தனஞ்சய 29 பந்துகளில் 3 சிக்ஸர்கள் மற்றும் ஒரு பௌண்டரியோடு 40 ஓட்டங்கள் பெற்றார்.

பி-லவ் கண்டி அணியின் பந்துவீச்சு சார்பில் அதன் தலைவர் வனிந்து ஹஸரங்க, இசுரு உதான மற்றும் அஞ்சலோ மெத்தியூஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

170 ஓட்டங்கள் வெற்றி இலக்குடன் களம்மிறங்கிய பி-லவ் கண்டி அணி ஆரம்பத்தில் தடுமாறியபோதிலும் அணித்தலைவர் வனிந்து ஹஸரங்க, ஆசிப் அலி ஆகியோர் மத்திய வரிசை துடுப்பாட்டத்தில் கைகொடுக்க வெற்றி இலக்கை நெருங்கியது.

இறுதி இரண்டு ஓவர்களுக்கும் 26 ஓட்டங்கள் தேவைப்பட்டு ஆட்டமானது சூடுபிடித்த நிலையில், பி-லவ் கண்டி அணியானது கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அணியின் அபார பந்துவீச்சால் போட்டியின் இறுதி இரண்டு ஓவர்களிலும் 16 ஓட்டங்கள் மாத்திரம் எடுத்தது. இதனால் கண்டி பி-லவ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 160 ஓட்டங்களுடன் போட்டியில் தோல்வியடைந்தது.

70 ரஷ்ய விளையாட்டு வீரர்கள் குடியுரிமையைத் துறந்தனர்

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்ததைத் தொடர்ந்து சுமார் 70 விளையாட்டு வீரர்கள் தங்கள் குடியுரிமையை மாற்றிக்கொண்டமை தெரியவந்ததை அடுத்து ரஷ்ய விளையாட்டு துணை அமைச்சர் அலெக்ஸி மொரோசோவ் தனது "வருத்தம், இழப்பு" பற்றி பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

ரஷ்யாவின் அதிகாரப்பூர்வ அரச செய்தி நிறுவனமான டாஸ் இன் கூற்றுப்படி 2022ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து மொத்தம் 67 ரஷ்ய விளையாட்டு வீரர்கள் தங்கள் விசுவாசத்தை வேறொரு நாட்டுக்கு மாற்றியுள்ளனர்.

அவர்களில் 47 பேர் கோடைகால ஒலிம்பிக் விளையாட்டுகளிலும், எட்டு பேர் குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுகளிலும், 12 பேர் ஒலிம்பிக் அல்லாத விளையாட்டுகளிலும் போட்டியிட்டதாக ரஷ்ய விளையாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

பெப்ரவரி 2022இல் விளாடிமிர் புட்டின் உக்ரைன் மீது முழு அளவிலான படையெடுப்பைத் தொடங்கிய பின்னர் ரஷ்யா, பெலாரஸைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் தடை செய்யப்பட்டனர்.

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் பரிந்துரைகளைத் தொடர்ந்து பெரும்பாலான சர்வதேச கூட்டமைப்புகள் ரஷ்ய மற்றும் பெலாரஸ் பங்கேற்பாளர்களுக்கு முழுமையான தடை விதித்தன.

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி அதன் நிலைப்பாட்டை பின்வாங்கியுள்ளது. அவர்கள் உக்ரைனில் போரை ஆதரிக்கவில்லை மற்றும் இராணுவத்துடன் இணைக்கப்படவில்லை என்றால் அவர்கள் ஒரு நடுநிலை பதாகையின் கீழ் மீண்டும் அனுமதிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது.

ஆனால், உலக தடகளம் உட்பட பல சர்வதேச கூட்டமைப்புகள் தங்கள் தடைகளைத் தக்கவைத்துள்ளன.

அதேநேரத்தில் ரஷ்ய மற்றும் பெலாரஸியர்கள் அணி மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்படவில்லை.

சமீபத்திய மாதங்களில் தங்கள் விசுவாசத்தை மாற்றிக்கொண்ட ரஷ்ய விளையாட்டு வீரர்களில் மூன்று ஐரோப்பிய நீச்சல் சம்பியனான அனஸ்டாசியா கிர்பிச்னிகோவா, ஒலிம்பிக் ரோயிங் வெள்ளிப் பதக்கம் வென்ற ஹன்னா பிரகாட்சென் ஆகியோர் முறையே பிரான்ஸ் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளுக்குச் சென்றனர்.

கிரிக்கெட் களத்தில் மீண்டும் பென் ஸ்டொக்ஸ்

இங்கிலாந்து டெஸ்ட் கெப்டனும், உலகின் முன்னணி ஒல்-ரவுண்டருமான பென் ஸ்டோக்ஸ், ஓய்வு பெற்ற நிலையிலிருந்து வெளியேறி, இந்தியாவில் நடைபெறும் ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடத் தயாராகிவிட்டார் என்று பிரிட்டன் தினசரி ஒன்று தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையின்படி, "பென் ஸ்டோக்ஸ் பரபரப்பான யு-டர்ன் செய்து, அடுத்த சீசனின் இந்தியன் பிரீமியர் லீக்கைத் தவறவிட்டாலும், இந்த ஆண்டு இங்கிலாந்துக்காக ஒரு நாள் சர்வதேச ஓய்வை மாற்றத் தயாராக இருக்கிறார். அவர் முழங்கால் அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப் படுவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

பூமாவுடன் ஒப்பந்தம் செய்தது செயின்ட் லூசியா ஒலிம்பிக் கமிட்டி

ஜேர்மன் விளையாட்டு நிறுவனமான பூமாவுடன் அதன் அதிகாரபூர்வ ஆடை அனுசரணையாளராக மாறுவதற்கான ஒப்பந்தத்தை செயின்ட் லூசியா ஒலிம்பிக் கமிட்டி அறிவித்துள்ளது, இதில் பரிஸ் 2024க்கான உபகரணங்களை பூமா வழங்கும்.

புதிய ஐந்தாண்டு ஒப்பந்தம் செய்த பின்னர் செயின்ட் லூசியாவின் நம்பிக்கைக்குரிய இளம் ஒட்டப்பந்தய வீரரான ஜூலியன் ஆல்ஃபிரட்டுக்கு நிதியுதவி செய்வதாக பூமா அறிவித்தது.

22 வயதான டெக்சாஸ் பல்கலைக்கழக மாணவர், கடந்த ஆண்டு பேர்மிங்காமில் நடந்த கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் 100 மீற்றர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் தேசிய கல்லூரி தடகள சங்கத்தின் (NCAA) வரலாற்றில் 60 மீ.க்கு ஏழு விநாடி தடையை ஓடி முதல் பெண்மணி என்ற பெருமையையும் பெற்றார்.

ஆல்ஃபிரட் மூன்று முறை தனிநபர் NCAA பிரிவு சம்பியனாவார். கடந்த மாதம், சான் சோல்வடாரில் நடந்த மத்திய அமெரிக்க மற்றும் கரீபியன் விளையாட்டுப் போட்டிகளில் 100 மீ. ஓட்டத்தில் தங்கப் பதக்கம் வென்றார்.

டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுகிறார் ஹசரங்க

இலங்கை அணியின் சகலதுறை ஆட்டக்காரர் வனிந்து ஹசரங்க டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற முடிவு செய்துள்ளார். அது தொடர்பான தனது முடிவை இலங்கை கிரிக்கெட்டிடம் (SLC) தெரிவித்துள்ளார்.

"நாங்கள் அவரது முடிவை ஏற்றுக்கொள்வோம், மேலும் எங்கள் வெள்ளைப் பந்து திட்டத்தில் ஹசரங்க ஒரு முக்கிய அங்கமாக இருக்கும் என்று நம்புகிறோம்" என்று SLC இன் CEO ஆஷ்லி டி சில்வா கூறினார்.

இலங்கை அணிக்காக நான்கு டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ளார். 26 வயதான அவர், 48 ஒரு நாள் சர்வதேச போட்டிகளிலும் 58 ரி20 போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7